தியானங்கள்... துணுக்குகள்...வியாக்கியானங்கள்



# பொற்குவியல்

பாஸ்டர். C. அலெகஸ் தினகரன்

# பொற்குவியல்

ஆசிரியர்

**பாஸ்டர்.C.அலெக்ஸ் தினகரன்**

வெளியிடுபவர்

**விண்ணக அப்பம்**

நேரு வீதி, சூரம்பட்டி,

ஈரோடு - 9.

EDITION - APRIL - 2015

TOTAL COPIES - 1000

COPY RIGHT - WINNAGA APPAM

PRICE - Rs.40.00 (IN INDIA)

BOOK NUMBER - T 63

FOR DETAILS CONTACT

**WINNAGA APPAM**

NO.4/2, NEHRU STREET, SOORAMPATTI,

ERODE – 638 009. S.INDIA

PHONE/Fax : (0424) 2277286

e-mail : erodeipa@yahoo.com

website:www.erodeipa.org

Bank of India (Erode Branch)

A/c No : 820210100005638

A/c Name : C.Alex Dhinakaran

# அணிந்துரை

**அன்பு மகன் பாஸ்டர் அலெக்ஸ் கிறிஸ்டோபர் அவர்கள் எழுதிய முதல் புத்தகத்திற்கு வாழ்த்து எழுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

இவரது தந்தை அறிஞர் கிறிஸ்டோபர் அவர்கள் சிறந்த ஆக்கியோன். நூற்றுக்கும் மேற்பட்ட ஆவிக்குரிய புத்தகங்களை பொக்கிஷமாக கிறிஸ்தவ உலகத்திற்கு அருளினவர். இன்றும் அவரது புத்தகங்கள் அநேகம் தேவ ஊழியர்களுக்கும், மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது.

தந்தையின் வழியில் மகன் என்ற சொல்லுக்கேற்றாற்போல், அருமை தம்பி அலெக்ஸ் ஆவிக்குரிய புத்தக உலகில் தனது முதல் சுவடிகளை பதிய வைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

ஈரோடு IPA சபைகளில் அவர் கொடுத்த முத்தான செய்திகளை பொற்குவியலாக சேகரித்து நமக்கு வழங்கி உள்ளார். நல்ல அருமையான தேவ வெளிப்பாடுகள், சிந்தனையைத் தூண்டும், கருத்துக்கள், வசன செரிவு நிறைந்த வார்த்தைகள்,



நகைச்சுவை கலந்த எழுத்து நடை இவைகளைக் கண்டு உள்ளம் பூரிக்கிறேன்.

இதுபோன்று இன்னமும் பல நல்ல புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு வெளியிட வாழ்த்துகிறேன். இந்த புத்தகம் நிச்சயம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். ஆவிக்குரிய வாழ்வில் வளர, பெலன் கொள்ள, சாட்சிகளாயிருக்க வாசியுங்கள்! அரும்பும் எழுத்துப்பணியை ஊக்குவியுங்கள்! ஜெபியுங்கள்!

**சங்கை.டேவிட் பிரகாசம்**

# என்னுரை

இனிய வாசகரே! இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துக்கள். **பொற்குவியல்** என்ற இப்புத்தகத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வேதம் சொல்லுகிறது "கர்த்தருடைய வசனம் பொன்னிலும் மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படதக்கது." பொன்னிலும் மேலான வசனங்களும் அவைகளுக்குள் இருக்கும் சத்தியங்களின் தொகுப்புமே இந்த பொற்குவியல்.

இதிலுள்ள பெரும்பாலான சத்தியங்கள் பரிசுத்த ஆவியானவரின் பாதத்தில் நான் பெற்றுக்கொண்டவை, சில பரிசுத்தவான்களின் பாதத்தில் நான் கற்றுக் கொண்டவை.

இவைகளை நான் எங்கள் திருச்சபையிலும் வேறுசில இடங்களிலும் பிரசங்கித்தபோது தேவ பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள், ஆறுதல் அடைந்தார்கள், ஆவியில் பெலப்பட்டார்கள். அதையே ஆண்டவர் உங்களுக்கும் செய்வாராக.

அந்த செய்திகளில் சிலவற்றை தொகுத்து **பொற்குவியல்** என்ற தலைப்பின் கீழ் புத்தகமாக இதை எழுதும் கிருபையை அளித்த தேவனுக்கு நன்றி உள்ளவனாய் இருக்கிறேன். இப்புத்தகத்திற்கு அணிந்துரை வழங்கிய அப்போஸ்தலர் டாக்டர்.டேவிட் பிரகாசம் அவர்களுக்கு எனது நன்றிகள்.



இத்தருணத்தில் காலம் சென்ற எனது தந்தை திருமறை அறிஞர் டாக்டர்.கிறிஸ்டோபர் அவர்களையும் தற்போது என்னோடு ஊழியத்தில் உறுதுணையாய் இருக்கும் எனது தாயையும் நினைவு கூறுகிறேன். இந்த பணியில் எனக்கு உறுதுணையாய் இருந்து வரும் எனது குடும்பம், திருச்சபை மக்கள் மற்றும் கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கிறேன்.

இந்த புத்ததக்தை வாசியுங்கள்! வேதத்தை நேசியுங்கள்! பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலை சுவாசியுங்கள்!

ஆமென்.

அன்போடும் ஜெபத்தோடும்

அவர் சேவையில்

**அலெக்ஸ் தினகரன்**

# பொருளடக்கம்

## அத்தியாயம்


1. உன்னதமானவரின் மறைவு
2. இரண்டு இரண்டுதான்
3. மனசாட்சி
4. நித்திரை(யில்) தரும் தேவன்
5. தண்ணீரும் இரத்தமும்
6. மேவிபோசேத்தும் சீயோனும்




# 1

# உன்னதமானவரின் மறைவு

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்."

(சங் 91:1)

நமது வேதபுத்தகம் விலைமதிக்க முடியாத ஒரு பொக்கிஷம். இதில் தனிச்சிறப்பான இடத்தை பிடித்திருப்பது சங்கீதங்களின் புத்தகம். காரணம் மக்களின் வாழ்வோடு பிரிக்கமுடியாதபடி ஒட்டிக்கொண்ட புத்தகம் இது.

கருவில் இருக்கும் குழந்தைக்கான ஜெபம் முதல் கல்லறையில் நடைபெறும் பரிசுத்தவான்களின் அடக்கம் வரை சங்கீதங்கள் வாசிக்கப்படாத இடம் இருக்கவே முடியாது. ஏன்? நம்மில் சிலரை பட்டினி கூட போட்டிருக்கிறது இந்த சங்கீதம்.

சிறு வயதில் சங்கீதத்தை மனனம் செய்தால் தான் சாப்பாடு என்ற அப்பா அம்மாவின் அன்புக் கட்டளையின் நிமித்தம் நம்மில் சிலர் பட்டினியாய் கூட இருந்திருக்கிறோம். ஆனால், இன்று என்னைப்போல பலருக்கு சாப்பாடு போடுவதே தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய இந்த சங்கீத புத்தகம்தான்.

இன்றும் சிலருக்கு துாக்கம் வரவில்லை என்றால், சங்கீதத்தை எடுத்து வாசித்தால் போதும் முடிப்பதற்குள் "கொர்" என்ற குறட்டையே விட்டு விடுவார்கள். ஆக, துாக்கமானாலும் சரி, துக்கமானாலும் சரி, சந்தோஷமானாலும் சரி, சலிப்பானாலும் சரி, கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வோடு கலந்திருப்பது சங்கீத புத்தகம்.

அதிலும் சில சங்கீதங்கள் மக்களின் வாழ்வில் நீங்கா இடம் பெற்றவை. அப்படிப்பட்டவைகளில் ஒன்றுதான் 91ம் சங்கீதம்.

இதன் தலைப்பில் யார் பாடினார் என்று போடாவிட்டாலும் 90ம் சங்கீதத்தை தேவனுடைய தாசனாகிய மோசே பாடினார் என்பதாலும், அதனை தொடர்ந்து இந்த சங்கீதம் வருவதாலும் இதை மோசே தான் பாடினார் என்று வேத வல்லுநர்கள் நம்புகிறார்கள். நானும் மனப்பூர்வமாய் இதை நம்புகிறேன்.





இந்த சங்கீதத்தின் முதல் வசனம் யார் பாடினார் என்பதை மிகத்துல்லியமாய் நமக்கு காண்பிக்கிறது. இதுவே நம் தியானத்தின் கருவும் கூட.

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன், சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்."

வேதத்தில் பரிசுத்தவான்கள் தேவனை வித்தியாசமான விதங்களிலே ருசித்திருக்கிறார்கள். தேவனுடைய கிருபையை அதிகம் ருசித்த மனிதன் யார்? என்று கேட்டால், தாவீது என உடனடியாக பதில் சொல்லுவோம். காரணம் - தான் பாடின சங்கீதங்களில் பெரும்பான்மையானவற்றில் கிருபையைக் குறித்து தாவீது பாடாமலிருந்ததில்லை. மாத்திரமல்ல - அவரது வாழ்வே நமக்கு தேவ கிருபையை படம் பிடித்துக் காட்டுகிறது.

விசுவாசத்திற்கு பேர் பெற்ற மனிதன் யாரென்றால்? ஆபிரகாம் என்று சொல்லுவோம். ஞானத்திற்கு? என்று கேட்டால் சாலமோன் என்போம். அதுபோல தன் வாழ்க்கையில் தேவனுடைய மறைவை அதிகமாய் கண்ட மனிதன் யார்? என்றால் **தேவனுடைய தாசனாகிய மோசே** தான்.

லேவியின் குடும்பத்தைச் சார்ந்த புருஷனு க்கும், ஸ்திரீக்கும் ஒரு பிள்ளை பிறக்கிறது. அப்போதோ பார்வோனாலே கொடூரமான சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. என்ன சட்டம்? பிறக்கும் ஆண் பிள்ளைகள் எல்லாம் கொலை செய்யப்பட வேண்டும். இதன் விளைவாக அநேக ஆண்பிள்ளைகள் சாகடிக்கப்படுகின்றன.

ஆனால் இந்த பிள்ளையோ ஒளித்து வைக்கப்படுகிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால் மறைக்கப்படுகிறது (யாத் 2:2). இந்த பிள்ளைதான் "மோசே" பிறந்த நாளிலிருந்தே மோசேயின் வாழ்வில் தொடங்கின இந்த மறைவு அவர் வாழ்நாள் முழுவதும் தொடர்வதை என்னால் காணமுடிகிறது. அது எப்படி? என்று கேட்கிறீர்களா?

வேதம் சொல்வதை கவனியுங்கள். உபா 34:6 அவர் அவனை (மோசேயை). . . .. அடக்கம் பண்ணினார். இந்நாள் வரைக்கும் யாரும் அவன் பிரேதக்குழியை அறியான். பாருங்கள், அவன் மரித்தபோது கர்த்தரே அடக்கம் பண்ணினாராம். அந்த இடத்தை ஒருவனும் அறியவில்லை, காரணம் கர்த்தர் **அதை மறைத்து விட்டார்**. ஆக மோசே பிறந்தநாள் முதற்கொண்டு முடிவு நாள் வரைக்கும் உன்னதமானவரின் மறைவு அவர் வாழ்க்கையை மூடியிருந்ததை காண முடிகிறது.





பிறந்த நாள் முதல் போராட்டங்கள், எதிர்ப்புகள், சத்துருக்கள், மரணம் இப்படி எத்தனையோ பிரச்சனைகள் துரத்திக் கொண்டிருந்தாலும், அவைகள் மோசேயை சேதப்படுத்தவில்லை. இதனை வாசிக்கும் அன்பு வாசகரே, போராட்டங்களையும், பிரச்சனைகளையும், பல்வேறு ரூபங்களில் வெவ்வேறு விதங்களில் நீங்கள் சந்தித்துக் கொண்டிருக்கலாம். ஒன்றை இங்கு சொல்ல விரும்புகிறேன். மோசேயின் தேவன் உங்களின் தேவன், முடிவு பரியந்தம் தம்முடைய மறைவில் வைத்துக் காக்க உன்னதமானவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

வாருங்கள்! மோசேயின் வாழ்வில் தேவனுடைய மறைவின் மகத்துவங்களை கண்டு மகிழ்வோம். பிறந்த நாளில் இருந்து **தாய் வீட்டிலே மறைவு**. மூன்று மாதத்திற்கு மேலோ தாயால் ஒளித்து வைக்க முடியவில்லை. இப்போது நைல் நதியிலே பிள்ளையை விட வேண்டிய நிலை. இப்போது நாணற்பெட்டி அந்த பிள்ளைக்கு மறைவு. எகிப்தின் நதியில் பிள்ளைகள் வீசப்பட்டன. அவை செத்தும் போயின. இந்த பிள்ளையோ ஜீவனோடு இருக்கிறது. காரணம் **நாணற்பெட்டியின் மறைவு.**

அருமையானவர்களே! இங்கே ஒரு குறிப்பிட்ட வார்த்தையை கவனியுங்கள். நதியில் எல்லா குழந்தைகளும் செத்துக் கிடக்கின்றன. மோசேயோ

ஜீவனோடிருக்கிறார். காரணம் மற்ற குழந்தைகள் வீசப்பட்டன. மோசேயோ நதியிலே விடப்பட்டார்.

சில நேரங்களில் நாமிருக்கும் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது பயம் நம்மை கவ்விக் கொள்ளலாம். கலக்கம் நம்மை சூழ்ந்து கொள்ளலாம். ஒன்றை இங்கே உங்களுக்கு தேவனுடைய வார்த்தையாய் சொல்லுகிறேன். **உங்களை முன்குறித்த ஆண்டவர் பிரச்சனைகளின் நடுவே உங்களை வீசி விடவில்லை. அதற்குள்ளே சில காலம் பயணப்படும்படி நம்மை விட்டிருக்கிறார்.** விட்டிருக்கிறார் என்றால் கைவிட்டிருக்கிறார் என்று நினைத்து விடாதீர்கள். **அரணிப்பான அனுகூலங்களை ஏற்படுத்தியே** நம்மை விட்டிருக்கிறார் என்பதை மனதில் வையுங்கள்.

சரி - விஷயத்திற்கு வருவோம். நாணற்பெட்டி நதியிலே பயணிக்கும்போது பார்வோன் குமாரத்தி ஸ்நானம் பண்ண வந்தாள். பெட்டிக்குள் இருக்கும் பிள்ளையைக் கண்டு இரக்கமுற்றாள். அவ்வளவுதான் அழிக்கப்பட வேண்டிய இந்த எபிரேயக் குழந்தை - அரண்மனையில் வளர்கிறது. இப்போது **அரண்மனையின் மறைவு** இந்த பிள்ளைக்கு ஒரு பாதுகாப்பு.

பின்பு மோசே பெரியவனானான், தன் சகோதரனாகிய இஸ்ரவேலன் கொடுமையாக





நடத்தப்படுவதைக் கண்டான், கோபமூண்டு எகிப்தியனைக் கொன்றான். அவ்வளவுதான் இப்போது பார்வோன் மோசேயை கொல்லத் தேடுகிறான். அரண்மனை எதிராய் திரும்பும் போது - மீதியான் தேசத்து **வனாந்திரம்** அவனுக்கு மறைவாயிற்று.

சில காலம் கழித்து மோசேக்கு தமது அழைப்பை தேவன் உறுதிப்படுத்தி எகிப்திற்கு தேவன் அழைத்து கொண்டு வருகிறார். பார்வோனுக்கு முன்பாக அநேக அற்புதங்களை மோசேயைக் கொண்டு கர்த்தர் செய்கிறார். சங்காரத்தூதன் எகிப்து தேசத்தில் நுழைய - அவன் நிழல்படும் எகிப்தின் வீடுகளில் எல்லாம் மரண ஓலங்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனத்திற்கோ (மோசேக்கோ) பஸ்கா ஆட்டுக்குட்டியின் ரத்தம் மறைவாய் இருக்கிறது.

எகிப்தை விட்டு வெளியே வந்தார்கள். மோசே ஆண்டவரை நோக்கிக் கேட்கிறார், ஆண்டவரே உமது மகிமையை எனக்கு காண்பியும். கர்த்தரோ - "என்னிடத்தில் ஓர் இடம் உண்டு, - அங்கே ஏறிவா. கன்மலை வெடிப்பிலே நில்லு. என் கரத்தினால் நான் உன்னை மூடுவேன் என்றார்." மோசே ஏறிப்போனார். கர்த்தர் அப்படியே செய்தார். இங்கே கன்மலை வெடிப்பிலே வைக்கப்பட்ட **மோசேக்கு தேவனுடைய கரம் மறைவாகிறது**.

வாழ்வின் முடிவிலே மோசே மரிக்கிறார். கர்த்தரே அடக்கம் பண்ணுகிறார். அந்த இடத்தை ஒருவருக்கும் தெரியாமல் மறைத்தும் விடுகிறார். ஆஹா! இங்கே கவனியுங்கள். **சில வேளைகளில் கர்த்தரே நேரிடையாக மறைக்கிறார். சில வேளைகளில் மனிதர்களைக் கொண்டும் கர்த்தர் மறைக்கிறார்.** சரியாய் சொல்ல வேண்டுமானால் **மறைக்கப்படும் விதங்களும், மறைக்கப்படும் இடங்களும் மாறிற்று. ஆனால் மறைத்துக் காப்பவர் ஒருநாளும் மாறவில்லை.** அல்லேலூயா!

இதை வாசிக்கும் நீங்கள் தாய் தகப்பனோடு இருக்கலாம். அல்லது தண்ணீரில் தூக்கி வீசப்பட்டது போல இருக்கலாம். அரண்மனையில் ஆசீர்வாதமாய் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அல்லது அவாந்தர வெளியில் அலைந்து கொண்டிருப்பவராக கூட இருக்கலாம். மகிமையைக் கண்ட மோசேயைப் போல மனம் மகிழ்ந்து கொண்டிருக்கலாம். அல்லது முடிவின் மறுமுனையில் மனம் தடுமாறிக் கொண்டிருக்கலாம்.

பயப்படாதிருங்கள்! ஆண்டவரின் வார்த்தையை உங்களுக்கு உரைக்கிறேன். உங்களை மறைப்பவர் மாறவில்லை. மனதில் வையுங்கள். ஒருபோதும் மறந்துவிடாதிருங்கள். முடிவுபரியந்தம் அவர் நடத்த உண்மையுள்ளவர்.





பல வருடங்களுக்கு முன்பிருந்து பிரபலமாய் பேசப்படும் விஷயங்களில் ஒன்று "டைட்டானிக் கப்பல்" மிகப் பிரம்மாண்டமானது. அநேக ஆடம்பர வசதிகளைக் கொண்ட சொகுசுக் கப்பல் அது. கப்பலை உருவாக்கினவர்கள் சவாலிட்டு சொன்னார்கள்.

"எப்பேர்ப்பட்ட விபத்தோ, இயற்கை சீற்றமோ இந்தக் கப்பலை சேதப்படுத்த முடியாது" இதில் பயணம் செய்பவர்களுக்கு உயிர்ச் சேதம் நேரிடாது என ஊர்ஜிதம் கொடுத்தனர். டிக்கெட் அமோக விற்பனை. மிக பிரம்மாண்டமாக இக்கப்பல் தனது முதற் பிரயாணத்தை தொடங்கியது.

ஆனால் முதல் பயணத்திலேயே பெரிய பனிப்பாறையில் கப்பல் மோதி பெரும்பாலான பயணிகள் மரித்தனர், கப்பலும் மூழ்கிப் போனது. இது ஒரு பக்கமிருக்க சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு கப்பலைப் போய் பார்த்தேன். அதன் பெயர் லோகோஸ் (LOGOS). அதன் வேலை என்னவென்றால் தேவனுடைய வேத புத்தகங்-களையும் ஆவிக்குரிய புத்தகங்களையும் சுமந்து கொண்டு பல தேசங்களுக்கு செல்வதுதான்.

அந்த கப்பல் துறைமுகத்திற்கு போய் சேர்ந்த உடனே, சுமந்து வரப்பட்ட புத்தகங்களும் வசனங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

நான் போய் பார்த்ததற்கு காரணம் - அந்தக் கப்பல் தனது இறுதி யாத்திரையை செய்கிறது. ஆகவே பொதுமக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டதால்தான்.

அந்த கப்பலில் போதகர்களின் கூடுகையில் நான் கலந்து கொண்டபோது அதன் பொறுப்பாளர் சொன்ன வார்த்தை என்னை மெய் சிலிர்க்கச் செய்துவிட்டது. இந்த கப்பலும், டைட்டானிக்கும் ஒரே வருடத்தில் கடலுக்குள் செலுத்தப்பட்டது. டைட்டானிக் கப்பற்காரர்கள் சொன்னார்கள் இது மூழ்காது காரணம் **விஞ்ஞானம்** . . . . நாங்கள் சொன்னோம் - நாங்கள் மிதப்பது **தேவ கிருபை.** இன்று வரை மூழ்காமல் கர்த்தர் காத்திருக்கிறார். அல்லேலூயா!

கவனியுங்கள்! விஞ்ஞானம் மூழ்கியது. கிருபை நிலைத்து நிற்கிறது. விஞ்ஞானமும், ஐஸ்வர்யமும், அந்தஸ்தும், பணமும் தோற்றுப்போகும். ஆனால் தேவனின் மறைவிலிருப்போர் மூழ்கிபோவதில்லை.

சூழ்நிலைகளைப் பார்க்கும்போது பாதியை கடந்துவிட்டோம். மீதி என்ன செய்வதென்று யோசிக்கிறீர்களா? நீங்கள் சேவிக்கிறவர் பாதியில் உங்களை விட்டுவிடுபவர் அல்ல. மறுகரையில் கொண்டு வந்து சேர்க்கிறவர். உங்களோடு கைகோர்த்துக் கொண்டவர்கள் மாறிப் போயிருக்கலாம்.





உங்களை கரம்பிடித்து நடத்துபவர் மாறவில்லை. மறந்துவிடாதீர்கள்!

ஒருவேளை உங்களது தற்போதைய சூழ்நிலையில் போராட்டங்களை சந்தித்து சோர்ந்து போயிருக்கலாம். தீர்க்கதரிசனமாய் சிலருக்கு இது நிறைவேறும்படி எழுதுகிறேன்.

நீங்கள் இப்போது படும் பாடுகள் மகிமையான எதிர்காலத்தை உங்களுக்கு வைத்திருக்கின்றன. நம்முடைய ஆண்டவர் உங்களை மூழ்கடிப்பவர் அல்ல. உங்களது முடிவை மகிமையாக்குகிறவர்.

ஆண்டவராகிய இயேசு சொன்னதை இங்கே நினைவுப்படுத்துகிறேன். **எருசலேமே! எருசலேமே கோழி தன் குஞ்சுகளை கூட்டிச் சேர்ப்பதுபோல உங்களை சேர்த்துக் கொள்ள ஆவலாய் இருக்கிறேன்.** நீங்களோ மாட்டேனென்கிறீர்கள். கவனியுங்கள்! அவர் ஆவலாய் இருக்கிறார். இவர்களோ மாட்டேன் என்கின்றனர்.

கர்த்தருடைய பிள்ளைகளே இது நமக்கு ஓர் எச்சரிப்பு! சில நேரங்களில் செட்டைகளுக்குள் இருக்க வேண்டிய நாம் தவறிப் போய் விடுவதினால் - பின்பு வாழ்க்கையையே தொலைத்து விடுகிறோம்.

ஆனால் நாமோ இன்றைக்கு, ஆண்டவரே எந்த சூழ்நிலையிலும் உம்முடைய மறைவிலிருக்க ஒப்புக் கொடுக்கிறேனென்று சொல்வோமானால் - நம்மை காக்கவும், மகிமையுள்ள சந்நிதானத்தில் மாசற்றவர்களாய் நம்மை நிறுத்தவும் ஆண்டவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். ஒப்புக் கொடுப்போமாக!

"என்னைக் காக்க கர்த்தர் உண்டு
கருத்தாய் என்னைக் காப்பார்
இராப்பகல் கண்ணுறங்காமல்
கண்மணிப்போல என்னைக் காப்பார்"

என்று பாடுங்கள்! மறைவின் மகத்துவங்களை அனுபவியுங்கள் ! அல்லேலூயா !!

✦ ✦ ✦ ✦ ✦ ✦



# 2

# இரண்டு இரண்டுதான்

வேத புத்தகத்தில் இரட்டிப்பான அபிஷேகத்திற்கு சொந்தக்காரர் யார் என்று கேட்டால், சட்டென எலிசா என்று பதில் சொல்லுவோம். அதுபோல இரட்டிப்பான ஆசீர்வாதத்திற்கு சொந்தக்காரர் தேவனுடைய தாசனாகிய யோபு.

யோபுவைக் குறித்து வேதம் சொல்லும் சாட்சி என்ன? உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்து பொல்லாப்பை விட்டு விலகுகிற மனுஷன் (யோபு 1:1). இந்த மனுஷனைக் கர்த்தர் திரளாய் ஆசீர்வதித்தது மாத்திரமல்ல, கர்த்தர் அவனை சுற்றிலும் வேலி அடைத்துக் காத்தார்.

இவைகளுக்குப் பின்பு, யோபுவின் வாழ்க்கையில் தேவன் அனுமதித்ததினாலே சாத்தானின் நிமித்தம் வந்த போராட்டங்கள் அதின் விளைவாய் இழப்புகள் யோபுவின் வாழ்க்கையை சூழ்ந்து கொண்டது.

ஆனால், அவர் வாழ்க்கையின் முடிவோ இழப்புகளோடு முடியவில்லை. கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுவிற்கு முன்பு இருந்த எல்லாவற்றையும் பார்க்கிலும் கர்த்தர் அவனுக்கு இரண்டத்தனையாய் தந்தருளினார் (யோபு 42:10).

இந்த இரண்டத்தனையான ஆசீர்வாதம் என்ற வார்த்தையை சற்றே உன்னிப்பாய் கவனியுங்கள்.

உபத்திரவத்திற்கு முன்பு ஏழாயிரம் ஆடுகள் இருந்தது. கர்த்தர் அவனுக்கு உபத்திரவத்திற்கு பின்பு பதினாலாயிரம் ஆடுகள் கொடுத்தார். மூவாயிரம் ஒட்டகங்களை கர்த்தர் ஆறாயிரமாக கொடுத்தார். ஐந்நூறு ஏர்மாடுகளை கர்த்தர் ஆயிரமாக கொடுத்தார். ஐந்நூறு கழுதைகளை ஆயிரமாக கொடுத்தார். இதெல்லாம் எதுக்குங்க ஒவ்வொன்னா சொல்றீங்க, ஒட்டுமொத்தமாக சொன்னா போதாதா என்று நீங்கள் சொல்வது எனக்கு புரிகிறது.

சொல்கிறேன் கவனியுங்கள்! எல்லாவற்றையும் இரட்டிப்பாய் கொடுத்தவர், பிள்ளைகளை மட்டும் சரியாய் பத்து பேரைக் கொடுத்தார். அதுவும் முன்னே உபத்திரவத்திலே மரித்தது போலவே மூன்று குமாரத்திகள், ஏழு குமாரர்கள்.





எல்லாவற்றையும் இரட்டிப்பாய் கொடுத்தார் என்றால் பிள்ளைகளையும் இரட்டிப்பாகத் தானே கொடுத்திருக்க வேண்டும். அச்சச்சோ! ஆண்டவர் பிள்ளைகளை மாத்திரம் அதே அளவு கொடுத்துவிட்டாரே என்று நாம் யோசிக்கலாம்.

ஒருநாள் நாம் பரலோகத்திற்கு போவோம். அப்போது யோபுவைப் பார்த்து என்னங்க Mr.யோபு கர்த்தர் இப்படி செஞ்சுண்டாரோ! என்று நாம் கேள்வி கேட்டால் யோபு என்ன தெரியுமா பதில் சொல்வார்? அபிஷ்டு அப்படி பேசாதே என்று யோபு நம்மை அப்படி கூட்டிக் கொண்டுபோய் பிள்ளைகளை காண்பிப்பார்.

இது கர்த்தர் எனக்கு உபத்திரவத்திற்கு முன்பு கொடுத்த (10) பிள்ளைகள். அது கர்த்தர் உபத்திரவத்திற்கு பின்பு கொடுத்த (10) பிள்ளைகள். . . கூட்டிப் பாருங்க கணக்கு சரியா வரும்.

என்ன யோசிக்கிறீர்கள். நமது ஆண்டவர் ஆலோசனைகளில் ஆச்சரியமானவர், கிரியைகளில் மகத்துவமானவர். ஒருவேளை உங்கள் வாழ்க்கையில் தற்போது சில ஆசீர்வாத குறைவுகள் இருக்கலாம். அது தற்காலிகமானவைகள் என்பதை மனதிலே வையுங்கள். நமது ஆண்டவர் குறைவுள்ளவர் அல்ல, அவர் **நிறைவுள்ளவர். மாத்திரமல்ல நிறைவாக்குகிறவர்.**

அவர் ஆசீர்வதித்தால் குறைவு என்பது ஒரு துளியும் இருக்காது என்பதற்கு யோபுவினுடைய வாழ்க்கையே சாட்சி. ஆகவே, குறைவை நினைத்து நீங்கள் கலங்க வேண்டிய அவசியமில்லை. **"தேவையை நினைத்து திகையாதே தெய்வத்தைப் பார்த்து நன்றி சொல்லு."** என்ற பாடலை பாடிக் கொண்டிருங்கள், ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஒருவேளை ஊழியத்தில் சில இழப்புகள் நிமித்தம் சோர்ந்து போயிருக்கலாம். மற்றவர்கள் இழிச் சொல்லுக்கு ஆளாயிருக்கலாம். இனி எழ முடியாது என்ற சத்தம் உங்கள் காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கலாம். அருமையான தேவனுடைய பிள்ளைகளே! தேவனுடைய வார்த்தையை உங்களுக்கென்றே பிரத்தியட்சமாய் எழுதுகிறேன்.

இருண்டு போன யோபுவின் வாழ்க்கையை இரண்டு மடங்காக ஆசீர்வதித்த தேவனாகிய கர்த்தர் ஒரு நாளும் உங்கள் விளக்கை அணைய விடமாட்டார். மங்கி எரிந்து கொண்டிருக்கும் உங்கள் திரியை அனலூட்டி எரிய வைப்பது மாத்திரமல்ல உங்கள் வெளிச்சம் மகா பிரகாசமாய் பிரகாசிக்கிற நாட்களை கர்த்தர் சமீபித்து வரப்பண்ணுகிறார்.

யோபுவிற்கு இரட்டிப்பாய் ஆசீர்வதிப்பேன் என்று முன்பே கர்த்தர் வாக்குப்பண்ணி இருந்ததாக





வேதத்தில் காண முடியாது. ஆனால், அவனை ஆசீர்வதிப்பதிலேயே பிரியமுள்ளவராக இருந்தார். நமக்கோ **இரட்டிப்பான நன்மைகளை தருவேன் இன்றைக்கே தருவேன்** என்று அவர் எழுதியே கொடுத்துவிட்டார்.

ஆகவே, இந்த வார்த்தைகள் நிச்சயம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும். யோபுவைப் போல எந்த சூழ்நிலையிலும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்பை விட்டு விலகுவோம். இரட்டிப்பான நன்மைகளை அனுபவிப்போம்!

"இரட்டிப்பான நன்மைகள் தந்திட
இயேசு வாக்களித்தாரே.
முன்மாரிமேல் பின்மாரி மழையே
உன்னதத்தில் இருந்து வந்திறங்குதே."

✦ ✦ ✦ ✦ ✦ ✦

# 3

# மனசாட்சி

மனித மனம் குரங்கு என்று உலகம் சொல்லுகிறது. வேதமோ மனதை சாதாரண இடத்தில் வைக்காமல் மிகவும் முக்கியப்படுத்துகிறது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆரம்பம் இரட்சிப்பில் துவங்குகிறது. இரட்சிப்பு எங்கே துவங்குகிறது என்று கேட்போமானால் மனம் திரும்புவதில் துவங்குகிறது.

ஆவிக்குரிய வாழ்க்கையின் முடிவு எங்கே என்று கேட்போமானால், மகிமையான மறுரூபத்தில் முடிவடைகிறது என்று நாம் பதில் சொல்லுவோம். ஆனால், நாம் அடையப் போகும் அந்த மகிமையான மறுரூபத்திற்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர்பை வேதம் நமக்கு சுட்டி காட்டுகிறது.

ரோமர் 12:2ஐ வாசித்துப் பாருங்கள். நமது மறுரூபம் நம்முடைய மனதிற்கு சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. மனம் புதிதாகிறதினாலே மறுரூப மாகுங்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆக





ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து ஆவிக்குரிய பாதையின் முடிவு வரைக்கும் நமது மனம் மறுக்கப்பட முடியாத முக்கிய பங்கை வகிக்கிறது.

மனம் எதையும் சிந்திக்கும் திராணியை உடையது. இந்த மனதின் சிந்தனை சரியா? தவறா? என்று சுட்டி காட்டுவது தேவன் நமக்கு கொடுத்திருக்கும் மனசாட்சி. ஆகவே தான் யாரையாகிலும் நாம் விசாரிக்கும்போது கூட உண்மையைச் சொல்ல சொல்லுங்கள், மனசாட்சியை தொட்டு சொல்லு என்று நாம் சொல்வது உண்டு.

**காரணம் ஒரு மனிதன் யாருக்கு தன்னை மறைத்தாலும், தன் மனசாட்சிக்கு தன்னை மறைக்க முடியாது.**

ஒரு பிரபல பிரசங்கியார் சொன்ன கதை இது. ஒரு மனிதன் இரயில்வே கிராஸிங்கில் வேலையை பார்த்துக் கொண்டிருந்தான். இரயில் பாதையை ஜனங்கள் கடக்கும்போது ஜனங்களை பாதுகாப்பாய் கடக்க செய்யும் பொறுப்பு மிகுந்த வேலை அது.

தற்போது இருப்பது போல இரயில்வே கேட் இல்லாத நாட்கள் அது. இவர் பச்சை விளக்கை காண்பித்தால் இரயில் போகும். சிகப்பு விளக்கை காட்டினால் இரயில் நிற்கும். ஒரு முறை இவர்

பணிபுரிந்த நேரத்தில் அந்த கிராஸிங்கில் விபத்து. விபத்தில் சில உயிர்களும் பரிபோய்விட்டது.

இப்போது கோர்ட்டில் விசாரணை நடக்கிறது. இந்த மனிதன் அழைத்து வரப்படுகிறான். கூண்டிற்குள் ஏறி நிற்கிறான். நீதிபதி இவனை விசாரிக்கும்படி இவனை பார்த்து ஒரு கேள்வியை கேட்கிறார். நீ விளக்கை காட்டினாயா? இவன் ஆம் நான் விளக்கை காட்டினேன் என்று சொன்னான்.

நீதிபதி அவனைப் பார்த்து, விளக்கை காட்டியிருந்தால் விபத்து நடக்க வாய்ப்பே இல்லையே என்று சொல்லி திரும்ப கேட்டார். நீ விளக்கை காட்டினாயா? அதற்கு பதில் ஆம், நான் விளக்கைக் காட்டினேன்.

மூன்றாம் விசை அதே கேள்வி அதற்கு அதே பதில். இப்போது நீதிபதி நீ நிரபராதி என்று அவனை விடுவித்துவிட்டார். வெளியே வந்த உடன் இவன் நண்பன் இவனைப் பார்த்து கேட்டான். நீதிபதி உன்னை மூன்று முறை கேள்வி கேட்டார். நீ பதில் சொன்னாய் ஆனால் அதில் ஒரு தயக்கம் இருந்ததே என்ன காரணம்? அதற்கு அவன் சொன்ன பதில் நான் விளக்கைக் காட்டினேன் ஆனால் எரியாத விளக்கையே காட்டினேன். அதினால் என் மனசாட்சி என்னைப் பாதித்தது.





பாருங்கள் அருமையானவர்களே! சாமர்த்தியமாக பேசலாம், செய்த தவறுக்கு சாட்சியமே இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம். என்ன செய்தாலும் நம் மனசாட்சியிலிருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது.

இந்த மனசாட்சி தான் நம் மனதை சுத்தமாக பாதுகாக்க உதவுகிறது. ஆனால், சில நேரங்களில் தொடர் பாவங்களினால், கூர்மையாக கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற மனசாட்சியை மழுங்க செய்துவிடுகிறோம். பின்பு, நம் வாழ்க்கையில் அதிக கேடு உண்டாக்கி கொள்கிறோம்.

தேவன் அருளும் சுத்தமுள்ள மனசாட்சியை பாதுகாக்க தேவன் வைத்திருக்கும் வழியை சற்றுத் தியானிப்போம்.

## 1. தேவனுடைய வார்த்தை

இயேசுவின் நாட்களில் ஒரு ஸ்திரீயை பாவத்திலே கையும் களவுமாக பிடித்தார்கள் (யோவான் 8:3,4). அவளை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே இவளைக் கொல்லப் போகிறோம் என்றார்கள். அப்போது இயேசு குனிந்து தரையிலே எழுதினார்.

வேதம் சொல்லுகிறது அவர்கள் தங்கள் மனசாட்சியில் கடிந்து கொள்ளப்பட்டு ஒவ்வொருவராய் அவர்கள் வழிகளில் திரும்பிப் போனார்கள்.

பிடிப்பட்ட ஸ்திரீயைக் குறித்து அவர்கள் சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள். கல்லெறியப்போகிறோம் ஏனென்று கேட்டால், மோசேயின் பிரமாணம். அவர்கள் வாயில் நிரம்பியிருந்தது என்ன? மோசேயின் பிரமாணம் (வசனம்). . . .

அவர்கள் கையைப் பாருங்கள் எல்லாருடைய கையிலும் கல் இருக்கிறது. கல் எதற்காக என்று கேட்டால் அதற்கும் அதே பதில் தான். இது மோசேயின் பிரமாணம் (வசனம்). . . வாயிலே வசனம், கையிலே இருப்பது வசனம். இப்போது இயேசுவின் பதிலைப் பாருங்கள். இயேசு குனிந்து தரையிலே எழுதுகிறார். அப்போது அவர்கள் தங்கள் மனசாட்சியிலே குத்தப்பட்டார்கள்.

வசனம் வாயிலும், கையிலும் இருப்பதைப் பார்க்கிலும் நம்முடைய மனசாட்சிக்குள் செல்ல வேண்டியதே மிக முக்கியம். இயேசு எழுதிய வசனம் அவர்கள் மனசாட்சியில் பாய்ந்தது. அப்போது அவர்கள் வாழ்க்கை மாறிற்று.





மனப்பாடமாய் பல வசனங்களை சொல்வது நல்லது. விதவிதமான பைபிள்களை கையில் வைத்துக் கொள்வதும் நல்லதுதான். அவைகள் எல்லாவற்றைப் பார்க்கிலும் வார்த்தையை நம் மனசாட்சியில் வைத்துக் கொள்வதே தேவனுக்கு முன்பாக நம்மை உகந்தவர்களாய் நிறுத்தும்.

சில நேரங்களில் சிலர்சொல்வார்கள் நான் 10 அதிகாரங்கள் படித்தேன், 12 அதிகாரங்கள் படித்தேன். அதெல்லாம் நல்லதுதான். அதினால் ஆண்டவர் உங்களோடு என்ன பேசினார் என்று சொல்ல கூடுமானால் உங்கள் வேத வாசிப்பும், உங்கள் வேத நேசிப்பும் சரியாய் இருக்கிறது.

ஆகவே, பிரியமானவர்களே! வசனம் நமது மனசாட்சியை சரியாய் உணர்த்தும்.

## 2. இயேசுவின் இரத்தம்

"நித்திய ஆவியினாலே தம்மை தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியைகளற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபிரேயர் 9:14).

நமது உணர்வுள்ள மனசாட்சி குத்தப்பட்ட நிலையிலே வாழ்வது நமது வாழ்க்கைக்கு ஆசீர்வாதமாக அமையாது. வேதம் சொல்லுகிறது இயேசுவின் இரத்தம் நமது மனசாட்சியை செத்த கிரியைகளற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்.

நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நாம் குற்றமுடையவர்கள் என்று நம்முடைய மனசாட்சியை குத்திக் காட்டுவது தேவனுடைய நோக்கமல்ல. அதை குற்றமற்றதாய் நிறுத்துவதே தேவனுடைய நோக்கம்.

நம்முடைய மனசாட்சிக்கு இப்படிப்பட்ட ஒரு நிலையை தரக்கூடிய வல்லமை இயேசுவின் இரத்தத்திற்குத்தான் உண்டு. நமது சரீரங்களில் செய்த பாவத்திற்கு மாத்திரமல்ல, நமது சிந்தனைகள் நிமித்தம் நம் மனசாட்சியில் ஏற்படும் போராட்டங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் வல்லமையும் இயேசுவின் இரத்தத்திற்கு உண்டு.

நம்முடைய சரீரத்தை மாத்திரமல்ல நம்முடைய சிந்தையையும் தமக்கேற்ற சுத்திகரிப்பினாலே சுத்திகரிக்க இயேசு உண்மையுள்ளவராய் இருக்கிறார். இதை வாசிக்கும்போது மனதிலும், சரீரத்திலும் விடுவிக்கப்பட முடியாத சிக்கலுக்குள் நீங்கள் சிக்கிக் கொண்டிருக்கலாம்.





அப்படி நாம் சந்திக்கும் சிந்தையின் போராட்டங்களிலும், சரீரத்தின் போராட்டங்களிலும் இதை வாசிக்கும்போதே இயேசுவின் இரத்தம் நமக்கு ஜெயத்தைக் கொண்டு வருவதாக.

சங்கீதக்காரனின் அறிக்கையை கவனியுங்கள். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள். நான் துர்க்குணத்தில் உருவானேன். சில நேரங்களில் தகப்பன், தாய்க்குள் இருந்த சில பாவத்தின் வல்லமைகள் நம் வாழ்க்கையில் செயல் கொள்ளலாம். அது கருவில் இருந்தே நமக்குள் குடிக் கொண்டிருக்கலாம். நம்மைக் குறித்து நாமே சில சமயங்களில் நொந்து கொள்ளலாம்.

இவை என் இரதத்தில் ஊறிப் போனவைகள். இவைகளிலிருந்து என்னால் விடுவிக்கப்பட முடியவில்லை என்பது உங்கள் அழுகுரலாய் இருக்குமேயானால் உங்கள் உடன் சகோதரனாய் ஒரு வார்த்தையை சொல்ல விரும்புகிறேன். உங்களுக்குள்ளே ஓடும் உங்கள் தாய், தகப்பனின் இரத்தத்தை விட உங்களுக்காக கல்வாரியில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் அதிக வல்லமையுடையதாய் இருக்கிறது.

ஆகவே, நம்முடைய சரீரத்தில் தம்முடைய ஜெயத்தை விளங்கப் பண்ணி நம்முடைய

வாழ்வினை வெற்றி சிறக்கப் பண்ண தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை நீங்கள் ஜெயிப்பீர்கள்.

எத்தனை நாட்கள் போராட்டம் என்பது முக்கியம் அல்ல. அது எவ்வளவு பெரியது என்பதும் முக்கியம் அல்ல. எல்லாவற்றையும் விட இயேசுவின் இரத்தமே பெரிதாய் இருக்கிறது. ஆகவே, இயேசுவின் இரத்தத்தைப் பற்றிக் கொள்வோம். அனுதின வாழ்வில் அவரால் வெற்றிக் காண்போம்.

## 3. ஆவியானவரின் கிரியை

"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு" (எபேசியர் 3:20).

இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்ட மனசாட்சி தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமேயானால் ஆவியானவரின் ஒத்தாசை என்பது மிகவும் முக்கியமானது.

சிலர் பரிசுத்த ஆவியானவர் என்றால் அந்நிய பாஷை பேசுவதற்குதான் அருளப்பட்டிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.





வேறு சிலரோ நம்மை வல்லமையாய் பயன்படுத்ததான் ஆவியானவர் என்று நினைத்துக் கொள்கிறோம். எல்லாமே சரியாக இருந்தாலும் ஒரு வசனத்தை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என் இருதயத்தை அடிக்கடி தொடும் வசனம் "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்யும் வல்லமையின்படியே. . . ." இந்த வார்த்தையை இங்கு கவனியுங்கள்.

ஆவியானவர் **நம்மை வல்லமையாய் பயன்படுத்துகிறார்** என்பது ஒரு பக்கம் எவ்வளவு உண்மையோ, அதே அளவு உண்மை **அதற்கு முன்பு அவர் நமக்குள்ளே வல்லமையாய் கிரியை செய்ய விரும்புகிறார் என்பதே.**

சில நேரங்களில் **நம்மைக் கொண்டு** வல்லமையாய் அவர் கிரியை நடப்பிக்க வேண்டும் என்று நாம் ஜெபிக்கிற அளவிற்கு வல்லமையாய் **நமக்குள்ளே** அவர் கிரியை நடப்பிக்க வேண்டுமென்று ஜெபிக்கவும், ஒப்புக்கொடுக்கவும் தவறிப்போய் விடுகிறோம்.

ஆவியனாவர் நமக்கு அருளப்பட்டதற்கு அடையாளங்களாக, அவரின் ஆசீர்வாதங்களாக, அவரால் உண்டாகும் அனுபவங்களாக நாம் பலவற்றை சொன்னாலும் நோக்கம் என்பது ஒன்றுதான்.

சகல சத்தியத்திற்கு உள்ளேயும் நம்மை நடத்திக் கொண்டுபோய் தெய்வத்தின் சித்தத்தை செய்து முடித்தவர்களாய், நம்மை இயேசுவிற்கு மணவாட்டியாக மாற்றவே ஆவியானவர் அருளப்பட்டிருக்கிறார். ஆகவே, இந்த ஆவியானவர் நம் மனசாட்சியில் கிரியை செய்ய ஒப்புக்கொடுப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது சிலர் **நல்மனசாட்சியை** தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள்.

இங்கு கவனியுங்கள்! நல்மனசாட்சி இல்லை - யென்றால் விசுவாச கப்பல் சேதமடையுமாம். கப்பல் சேதமடைந்தால் கரை சேர முடியாது. நம் விசுவாச வாழ்க்கையாகிய கப்பல் போய் சேர வேண்டிய மறு கரையாகிய பரலோகம் நமக்கு உண்டு. மறு கரையை நாம் அடைய வேண்டுமேயானால் இந்த நல்மனசாட்சி காக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆகவே, திரித்துவ தேவனின் கிரியைகளைக் கொண்டு நம்முடைய மனசாட்சியை காத்துக் கொள்ள ஆண்டவர் அருள் புரிவாராக!

✦ ✦ ✦ ✦ ✦ ✦



# 4

# நித்திரை(யில்) தரும் தேவன்

சங்கீதம் 127:3 ... அவரே தமக்கு பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.

எல்லாருக்கும் தெரிந்த வசனம் இது. தூங்க போகிறவர்களும், தூங்கி எழுபவர்களும் தாராளமாய் சொல்லும் வசனம். இதன் முந்தின பகுதியையும் சேர்த்து வாசியுங்கள். "நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தை சாப்பிடுகிறதும் விருதா. அவரே . . . நித்திரை அளிக்கிறார்".

இதே வசனம் முந்தின தமிழ் மொழி பெயர்ப்பில் எப்படி வந்திருக்கிறது தெரியுமா? அந்த வசனத்தை அப்படியே தருகிறேன் படியுங்கள்.

"நீங்கள் அதிகாலையில் எழுந்து, நடு ஜாமம் வரை வேலை செய்து, அரும்பிரயாசத்தின் ஆகாரம்

புசிப்பது விருதா: தமக்கு பிரியமானவன் நித்திரை செய்யும் போது, கடவுள் அவனுக்கு செல்வத்தை கொடுக்கிறார்." இதே வசனம் மலையாளத்தில் என்ன தெரியுமா கொடுக்கப்பட்டிருக்கிறது.

**"தண்டப்பிரியனோ அவன் அது உறக்கத்தில் கொடுக்குன்னு."**

சரி, எதற்கு இத்தனை வியாக்கியானம் என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது. நமது ஆண்டவர் அவருக்கு பிரியமானவர்களாய் வாழும் போது, நமது தூக்கத்திலும் நமக்கு தேவையான ஆசீர்வாதத்தை கொடுக்க வல்லவர் என்பதை இந்த வசனம் நமக்கு மிக தெளிவாய் சொல்லுகிறது.

நான் இந்த வசனத்தை சற்றே விவரித்து காண்பிக்கிறேன். நம்முடைய கடினப் பிரயாசம் சில பல நேரத்தில் கைக்கொடுப்பதில்லை, விருதாவாய்ப் போய்விடுகிறது. ஆனால் நமக்கொரு ஆண்டவர் இருக்கிறார். அவர் நமக்காய் நன்மைகளை ஆயத்தம் பண்ணுகிறவர். அவர் ஆயத்தம் பண்ணுகிறது நமக்கு ஒரு நாளும் விருதா அல்ல, அது ஒவ்வொரு நாளும் ஆசீர்வாதம்.

நான் உழைப்பதினால் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்வதை விட, எனக்கு அவர் கொடுப்பதினால் நான் ஆசீர்வதிக்கப்படுகிறேன்





என்பதே சரி. தேவன் நமக்கு உறக்கத்தை தருகிறார் என்பதை நான் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் நாம் உறங்கிக் கொண்டிருக்கும் போது, நமக்குத் தேவையானதை தர போதுமானவராய் இருப்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

என்னுடைய அப்பா பாஸ்டர்.கிறிஸ்டோபர் இப்படி சொல்லுவார்கள். பிரச்சனை நேரத்தில் பாஸ்டர்மார்களுக்கு ஜெபம் வருகிறதோ இல்லையோ, கண்டிப்பாக தூக்கம் வந்திடும். யோனாவை பாருங்க, கடல் கொந்தளிக்குது ஜனங்கள் அலைமோதுகிறார்கள்.

ஆனால் இவரோ அடித்தட்டில் சுகமான தூக்கம். பாஸ்டர்.பேதுருவைப் பாருங்க, விடிந்தா மரண தண்டனை சபையார் எல்லாரும் ஊக்கமாய் ஜெபிக்கிறார்கள். இவரோ ஜெயிலுக்குள் தூக்கமாய் இருந்தார்.

எலியாவைப் பாருங்கள், யேசபேல் கொலை செய்வேன் என்று செய்தி அனுப்பிவிட்டாள். அப்போதும் சூரைச்செடியின் கீழ் படுத்து இவருக்கு தூக்கம். ஆக பிரச்சனை வரும் போதெல்லாம் பரிசுத்தவான்களுக்கு தூக்கமும் சேர்ந்தே வருகிறது. அப்போ! ஏவாள உண்டாக்கும் போது ஆதாமுக்கு ஏன் தூக்கம் வந்துச்சுன்னு என்னைக் கேட்டு செய்தியை திசை மாத்திராதீங்க!!!

நான் விஷயத்துக்கு வருகிறேன். கடல் கொந்தளித்த போது யோனா நித்திரையாய் இருந்தாரே தவிர, யோனாவின் தேவன் நித்திரையாய் இருக்கவில்லை. அவரோ தமது தாசனை சுமக்க மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார்.

பேதுரு சிறைச்சாலையில் நித்திரையாய் இருந்தபோது, பேதுருவை விடுவிக்கும்படிக்கு தேவன் தூதனை அனுப்பினார். எலியா சோர்ந்து போனபோது அப்பத்தை அவனுக்கு கொடுக்கும்படிக்கு கர்த்தர் தூதனை அனுப்பினார்.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் பிரச்சனையை சந்திக்கும் நாம் கூட சில நேரத்தில் தூங்கிவிடுவோம். ஆனால் நம்மை காக்கும் கர்த்தர் உறங்குவதும் இல்லை தூங்குவதும் இல்லை மறந்துவிடாதீர்கள்.

ஒருவேளை இந்த வார்த்தைகளை வாசித்துக் கொண்டிருக்கும்போது, அலைகள் மோதிக் கொண்டிருக்கலாம். உங்களை தூக்கி எரிய சில மக்கள் ஆயத்தமாயிருக்கலாம், விடிந்தால் தீர்ப்பு மறுநாளை காண்பேனா என்ற போராட்டம் உங்கள் உள்ளத்தை கரையச் செய்துக்கொண்டிருக்கலாம்.

மரண பயமோ, வியாதியின் போராட்டமோ கவ்விப்பிடித்ததினாலே, தவித்துக் கொண்டிருக்கும்





தருணத்திலே தள்ளாடிக் கொண்டிருக்கலாம். எது எப்படி இருந்தாலும் **உங்களுக்காக இப்பொழுது தேவன் கிரியை செய்துகொண்டிருக்கிறார்** என்பதை மனதில் வையுங்கள். திரும்ப சொல்கிறேன் கர்த்தர் உங்களுக்காக இப்போது கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

இந்த வார்த்தைகளை ஒரு முறை கூட திரும்ப வாசிப்பதில் தவறில்லை. ஏனென்றால் இது உங்களில் சிலருக்கு பிரத்தியட்சமான தேவனுடைய வார்த்தை. இதை வாசிக்கும்போதே ஆவியில் நீங்கள் அனல் கொள்வீர்கள். உன்னதமான ஒரு பெலத்தினால் நிரப்பப்படுகிறீர்கள். ஒரு விஷேசித்த தைரியம் உங்களை ஆட்கொள்வதாக! விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தரால் சொல்லப்பட்டது அவளுக்கு நிறைவேறும்.

இதுவரைக்கும் உங்கள் உழைப்புகள், முயற்சிகள், எதிர்பார்ப்புகள் விருதாவாய் போயிருக்குமானால் கர்த்தாவே உமக்கு பிரியமாயிருக்க கற்றுத் தாரும் என்று கேட்போம். நம்முடைய நித்திரையிலும் நம்முடைய தேவைகளை சந்திக்க அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

இந்த வசனத்தில் அப்பம் என்ற வார்த்தையை கவனியுங்கள். நாம் என்னதான் உழைத்தாலும் அதின் பலன் வருத்தத்தின் அப்பமே. தேவன் ஒன்றைத்

தருவாரானால் அது நமக்கு வருத்தம் அல்ல, அல்லவே அல்ல. அது நமக்கு ஆசீர்வாதத்தின் அப்பம்.

தேவன் அருளும் அப்பத்திற்குள் (ஆசீர்வாதத்திற்குள்) நமக்கு இருக்கும் நன்மைகள் சிலவற்றை விவரமாய் காண்போம்.

## 1. ஆறுதல்

ரூத் நகோமியின் வாழ்க்கையை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த கால வாழ்க்கை முழுவதும் வருத்தமும் கசப்பும்தான். கர்த்தர் தம்முடைய ஜனத்தை சந்தித்து ஆகாரம் (அப்பம்) அருளினார் (ரூத் 1:6) என்று கேள்விப்பட்டு கர்த்தரின் போஷிப்பிற்குள் வந்த இவளது வாழ்க்கை என்னவாயிற்று. **ஆறுதலடைந்தது** (ரூத் 4:15). தேவன் அப்பத்தை தருவாரானால் அதனோட கூட ஆறுதலையும் தர போதுமானவராயிருக்கிறார். கர்த்தர் ஆசீர்வதித்தால் அதினோடே வேதனையை கூட்டார்.

ஆகவே, தேவனுடைய ஆசீர்வாதத்தில் வேதனை இல்லை. அதற்கு பதிலாக வேதனையை மறக்கும் ஆறுதல் இருக்கிறது.

அருமையானவர்களே! நீங்கள் நடந்து வரும் பாதையில் தேவன் உங்களை சந்தித்து அப்பம் அருளும் வேளை துாரமாயில்லை, சமீபமாய்





இருக்கிறது. சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம். நீங்கள் நிறைவான ஆறுதலைப் பெற்றுச் சுகித்திருப்பீர்கள்.

## 2. அறுவடை

அது மாத்திரமல்ல, இந்த சம்பவத்தில் ஒரு வார்த்தை என்னைத் தொடுகிறது. அவள் பெத்லகேமுக்கு வந்த நாட்களைக் குறித்து வேதம் சொல்லும் வார்த்தையைக் கவனியுங்கள். (ரூத் 1:22) ". . . . . வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் வந்தார்கள்." தேவன் அப்பத்தை தருகிறார் என்றால் அறுவடையை துவங்கிவிட்டார் என்றே அர்த்தம்.

அல்லேலூயா! கர்த்தருடைய பிள்ளையே இந்த வார்த்தையை கர்த்தர் அப்படியே உங்கள் வாழ்க்கையில் பலிக்கப்பண்ணுவாராக. சரியான தருணத்திற்கு உங்கள் வாழ்க்கையை கர்த்தர் நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்.

விதைக்க ஒரு காலம் உண்டு, அறுக்க ஒரு காலம் உண்டு என்று வேதம் சொல்லுகிறது. தேவ ஆவியின் உந்துதலோடு இதை எழுதுகிறேன். இழப்புகளோடும், கசப்பான அனுபவங்களோடும் நீங்கள் பாதைகளை கடந்த வந்தது உண்மைதான். இப்போதோ உங்கள் கால்கள் சரியாய் அறுவடையின் காலத்தில் வந்து நின்றுகொண்டிருக்கிறது.

கண்ணீரோடு விதைக்கிறவன், கெம்பீரத்தோடு அறுப்பான் என்ற வாக்கின்படியே, உங்கள் அறுப்பை கெம்பீரமாக்க கர்த்தர் உங்களை அழைத்துக் கொண்டு போகிறார். தொடர்ந்து முன்னேறுங்கள். உங்கள் அழுகை ஆறுதலாக மாத்திரமல்ல. ஆனந்தமாகவும், அறுவடையாகவும் மாற்றப்படும். உங்கள் கண்ணீர் களிப்பாக்கப்படுவதை காண்பீர்கள். நீங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கு சரியாக கர்த்தர் உங்களை மகிழ்ச்சியாக்குவாராக.

## 3. பெலன்

இங்கே வேதத்தில் இன்னொரு சம்பவத்தை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். 1 இராஜா 19:8ல் எலியாவை தேவன் போஷித்தபோது அந்த போஜனத்தின் (அப்பத்தின்) பெலத்தினால் நாற்பது நாள் இரவும் பகலும் தேவனுடைய பர்வதம் மட்டும் போனான். ஆக தேவன் தரும் அப்பத்திற்குள் நம்முடைய வாழ்க்கைக்கு தேவையான பெலன் இருக்கிறது.

தூதன் அப்பத்தைக் கொடுக்கும்போதே சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள். நீ போக வேண்டிய தூரம் வெகு தூரம். ஒருவேளை நம்முடைய ஊழியத்தின் தரிசனம், உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் உங்களுக்கு முன்பாக இருக்கும் இலக்கு வெகு தூரத்தில் இருப்பது போல் தெரியலாம்.





எப்படி நடப்பேனோ, எப்போது பிடிப்பேனோ என்ற அங்கலாய்ப்பு உங்களுக்கு இருக்கலாம். தேவ பிள்ளையே தரிசனத்தை உங்கள் வாழ்க்கையில் தந்த தேவன் அதை நீங்கள் அடையும்படிக்கு உங்களுக்கு பெலத்தைத் தர போதுமானவராய் இருக்கிறார்.

இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வெகு தூரம் என்றாலே விசேஷமான ஆசீர்வாதம் நமக்கு காத்திருக்கிறது என்று தான் அர்த்தம். எப்படி சொல்கிறீர்கள் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன் கவனியுங்கள்.

தாவீது தேவனுக்கு வீட்டைக் கட்ட நினைத்தபோது தேவன் நாத்தான் தீர்க்கதரிசையைக் கொண்டு சொன்ன வார்த்தையை வாசித்துப் பாருங்கள். 2 சாமு 7:19 "....அடியானுடைய வீட்டைக் குறித்து வெகு தூரமாய் இருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர்முறைமையாய் சொன்னீரே...."

தாவீதின் வீட்டை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி சொன்ன வார்த்தைகள், வாக்குத்தங்கள் வெகுதூரமாய் இருக்கும் காலத்துச் செய்திகள். இந்த வெகு தூரத்து செய்தியை தாவீது எப்படி வருணிக்கிறார் என்பதைப் பாருங்கள். 2 சாமு 7:28

"....உமது அடியானுக்கு நல்ல விசேஷங்களை வாக்குப்பண்ணினீர்." 2 சாமு 7:27

ஆஹா, இதை எழுதும்போதே என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் தேவனுக்குள் களிகூறுகிறது. என் உச்சந்தலையில் தேவனுடைய ஆசீர்வாதம் வந்திறங்குவதை போன்ற உணர்வு ஆட்கொள்வதினால் புல்லறித்து போகிறேன். இதை வாசிக்கும் உங்களுக்குள்ளும் இதே உணர்வை ஆவியானவர் உண்டாக்குவாராக.

நம்மைக் குறித்து தேவன் வைத்திருக்கும் வெகு தூர செய்தி, ஒரு மனுஷனும் நமக்கு தரமுடியாத நல்ல விசேஷம். அது வெகு தூரமாய் இருக்கிறதே என்பதைப் பற்றியெல்லாம் கவலை வேண்டாம்.

தாவீதுக்கு செய்தி வந்தவுடன் களிகூர்ந்து தேவனைத் துதித்து அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொண்டதுபோல, இந்த வார்த்தைகளை வாசிக்கும் போதே தேவனைத் துதித்து இந்த வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களை விசேஷித்தவர்களாயும், மேன்மையான புருஷர்களாயும், ஸ்திரீகளாயும் மாற்ற அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

இந்த வெகுதூரத்தைக் கடக்க அவரே பெலன் தர போதுமானவராய் இருப்பார். தடைகள் வரலாம். சவால்கள் உண்டாகலாம், ஏன்? சில சமயங்களில் நாமே கூட சோர்ந்துபோய்விடலாம். ஒன்றுமட்டும் உண்மை நமக்கான பிரயாணத்தை நிர்ணயம்





பண்ணினவர் நாம் அதை அடையும் அளவும் நம்மை அவர் விடப்போவதில்லை. உங்களை பெலப்படுத்தி நிச்சயம் ஓடச்செய்வார்.

காலேப் சொன்ன வார்த்தையை இங்கே நினைவு கூறுகிறேன். (யோசுவா 14:10,11)

"கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார் . . . மோசே என்னை அனுப்புகிற நாளில் எனக்கு இருந்த அந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது." ஆகவே எபிரோனை எனக்கு தாரும். அப்படியே யோசுவா காலேபுக்கு எபிரோனை கொடுத்தார்.

கர்த்தருடைய பிள்ளையே, நீங்கள் எதைப் பார்த்தீர்களோ அதை சுதந்தரிப்பீர்கள். கர்த்தர் எதைத் தருவேன் என்று சொன்னாரோ அதை நிச்சயம் உங்களுக்கே தருவார். எதை தரிசனத்தில் கண்டீர்களோ, அது உங்களுடையதாகும். இதை நீங்கள் அனுபவிக்க போகும் நாட்கள் தூரத்தில் இல்லை, சமீபித்திருக்கிறது.

இனி காலங்கள் உருண்டோடிப் போய்விட்டது என்ற கவலை வேண்டாம். கர்த்தர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். அவர் சொன்னதை நிறைவேற்றுமளவும் அவர் உங்களைவிட்டு விலகுவதுமில்லை, உங்களைக் கைவிடுவதுமில்லை.

ரூத், நகோமியின் வாழ்க்கையில் தேவன் அருளிய அப்பம் அவர்கள் வாழ்க்கையில் நிரந்தர ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. அதுபோல உங்கள் வாழ்க்கையிலும் நித்திய ஆசீர்வாதங்களையும், நிரந்தர கீர்த்தியையும் தேவன் உண்டாக்குவாராக. எலியாவின் வாழ்க்கையில் தேவன் அருளின அப்பத்தின் பெலன் செய்த காரியமென்ன, "போதும் என்னை எடுத்துக்கொள்ளும் என்று சொன்ன அறிக்கையை மாற்றி, ஊழியத்தை வெற்றியோடு எலியாவை தொடரச் செய்தது." ஏற்ற நேரம் வந்தபோது கர்த்தர் அவனை எடுத்துக் கொண்டார்.

கர்த்தருடைய பிள்ளையே, தேவன் நம்மை எடுத்துக் கொள்ளும் ஏற்ற நேரம் என்பது சபை எடுத்துக் கொள்ளப்படும் இரகசிய வருகையே. ஆகவே அதுவரைக்கும் நீங்கள் உங்கள் பணியை சிறப்போடு செய்ய கர்த்தர் அருள்புரிவாராக என்று ஜெபத்தோடு எழுதுகிறேன், வாழ்த்துகிறேன்.

நினைவுகூறுங்கள்!

- ✔ ஆறுதல்
- ✔ அறுவடை
- ✔ பெலன்





ஒன்றே ஒன்றுதான், உமக்கு பிரியமாய் இருக்க விரும்புகிறேன் என்று நம்மை ஒப்புக்கொடுப்போமாக. தேவன் தரும் ஆசீர்வாதங்களை அனுபவிப்போமாக.

"உமக்கு பிரியமானதை செய்ய

எனக்கு கற்றுத் தாரும் தெய்வமே

உம் நல்ல பரிசுத்த ஆவியானவர்

செம்மையான வழியிலே நடத்த வேண்டுமே."

✦ ✦ ✦ ✦ ✦ ✦

# 5

# தண்ணீரும் இரத்தமும்

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையைக் குறித்து நிழலாட்ட சம்பவங்கள் பலவற்றை ஆவியானவர் வேதத்தில் பதிந்து வைத்திருக்கிறார்.

இயேசு - ஸ்திரீயின் வித்தாய் பூமிக்கு வருவாரென்று முதல் தீர்க்கதரிசனத்தை உரைத்த பிதாவாகிய தேவன், அவர் மனுகுலம் இழந்துபோன மகிமையை, திரும்ப அவர்களுக்கு கொடுக்கும்படி, தம்மையே தியாகபலியாக கொடுப்பார் என்ற முன்னடையாள சம்பவத்தையும் நடத்தி காண்பித்தார்.

ஆதாமும், ஏவாளும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களானபோது ஆண்டவர் தோலினால் ஆன வஸ்திரத்தை அவர்களுக்கு உடுத்துவித்தார்.





இந்த சம்பவம், மனுகுலம் பாவத்தினால் மகிமையற்று இருக்கும்போது, தேவகுமாரனாகிய இயேசு தான் அடிக்கப்படவும், மரிக்கவும் தம்மை ஒப்புக்கொடுப்பார்; அதினாலே நாம் இரட்சிப்பின் வஸ்திரத்தை உடையவர்களாவோம் என்ற சத்தியத்திற்கு நிழலாட்டமாய் இருக்கிறது.

ஆபிரகாம் தன்னுடைய ஒரே பேரான குமாரனாகிய ஈசாக்கை பலியாகக் கொடுக்கப்போன சம்பவம் நம்முடைய பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை (கிறிஸ்துவை) பலியாகக் கொடுப்பார் என்ற சத்தியத்திற்கு முன் அடையாளமாய் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் சீன் வனாந்திரத்தில் தண்ணீர் இல்லாமல் இருந்தபோது கர்த்தர் மோசேயைக் கொண்டு கன்மலையை கோலினால் அடிக்கச் செய்து தண்ணீரை புறப்படப்பண்ணினார். அப்போது அவர்கள் தாகம் தீர்க்கப்பட்டார்கள்.

இது நமக்காக இயேசு பிளவுண்ட கன்மலையானார். அவராலே நாம் தாகம் தீர்க்கப்படுவோம் என்ற சத்தியத்திற்கு நிழலாட்டமாய் இருக்கிறது.

இப்படி எண்ணற்ற சம்பவங்களை நமது வேதத்தில் அடுக்கிக் கொண்டே போகலாம். சம்பவங்கள் மாத்திரமல்ல, பழைய ஏற்பாட்டிலுள்ள

சரித்திர புருஷர்களின் (பரிசுத்தவான்களின்) வாழ்க்கையும் இயேசுவுக்கு முன்னடையாளமாய் இருக்கிறது.

தாவீது, ஈசாக்கு, போவாஸ் போன்றோரின் வரிசையில் மிக முக்கியமானவர் யோசேப்பு. இந்த யோசேப்பின் வாழ்க்கையிலிருந்துதான் இப்போது சில சத்தியங்களை தியானிக்கப் போகிறோம்.

என்னைப் பொறுத்த வரை மற்ற எல்லா பரிசுத்தவான்களை விட யோசேப்பின் வாழ்க்கை கிறிஸ்து இயேசுவுக்கு மிக நேர்த்தியான நிழலாட்டம் என்று சொல்லுவேன். அதற்கு அநேக காரணங்கள் இருந்தாலும் சிலவற்றை இங்கு தருகிறேன்.

இயேசுவைக் குறித்து வேதம் சொல்லும் போது தேவ தூதரிலும், விசேஷித்தவர் (எபி 1:4) என்று சொல்லுகிறது. அதாவது தன் பிதாவின் வீட்டில் வாழும் எல்லாரையும் விடவும் இயேசு விசேஷித்தவர்.

அப்படியே யோசேப்பும், தன் சகோதரர் எல்லாரிலும் விசேஷித்தவர். (ஆதி 49:26).

எல்லாரிலும் இயேசு விசேஷித்தவராய் இருந்தாலும் மகிமையினால் முடிசூட்டப்படும்படிக்கு தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார் (எபி 2:9) என்று வேதம் சொல்லுகிறது. அப்படியே யோசேப்பும்





தான் முடிசூட்டப்படுகிற மேன்மையை முன்னிட்டு சில காலம் தாழ்த்தப்பட்டார்.

யோசேப்பு தன் சகோதரராலே 20 வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார். இந்த சம்பவம் இயேசுவோடு இருந்தவனே இயேசுவை 30 வெள்ளிக் காசுக்கு காட்டிக் கொடுத்ததிற்கு முன்னடையாளமாய் இருக்கிறது.

யோசேப்பை விற்ற அவன் சகோதரர்கள் அவன் வஸ்திரத்தையோ தங்களோடே எடுத்துக் கொண்டார்கள். அப்படியே இயேசுவை சிலுவையில் அறைந்த போர்ச்சேவகர்கள் அவரது வஸ்திரத்தை தங்களுக்குள் சீட்டுப்போட்டுக் கொண்டார்கள்.

யோசேப்பு ராஜாவுக்கு முன்பாக நின்று தன் ஊழியப் பொறுப்பை தன் கையில் எடுக்கும் போது முப்பது வயதுடையவராய் இருந்தார். அப்படியே இயேசு தன் ஊழியத்தை இந்த பூமியிலே நிறைவேற்ற துவங்கும் போது முப்பது வயதை உடையவராய் இருந்தார்.

பார்த்தீர்களா! எத்தனை ஒற்றுமை யோசேப்பிற்கும் இயேசுவிற்கும் இடையே. சரி இவ்வளவு சுத்தி வளைத்து என்ன சொல்ல வருகிறீர்கள் என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது - சொல்கிறேன் கவனியுங்கள்.

இப்படி அநேக விதங்களில் இயேசுவிற்கு முன்னடையாளமாய் இருக்கும் யோசேப்பு, தான் மரிக்க போவதற்கு முன்னதாக சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள்.

ஆதி 50:24. "நான் மரணமடையப் போகிறேன். ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து . . . ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப் பண்ணுவார். ஆதி 50:25. தேவன் உங்களை சந்திக்கும் போது என் எலும்புகளைக் கொண்டுபோவீர்களாக என்று சொல்லி" ஆணையிடுவித்துக் கொண்டான்.

இப்படி யோசேப்பு சொன்னார். பின்பு மரித்தார். அவர் எலும்பு கானானுக்குச் சென்றது. இந்த வசனத்திற்குள் இருக்கும் சத்தியத்தை விளங்கிக் கொள்ளும்படிக்கு கர்த்தர் நமக்கு கிருபை செய்வாராக.

யோசேப்பு இயேசுவின் நிழலாட்டம் என்பதை நாம் நன்கு அறிவோம். எலும்பு எதற்கு அடையாளம் என்ன என்று கேட்போமானால், வேதம் சொல்லுகிறது ஆண்டவர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி அவன் விலாவில் ஒன்றை எடுத்து அவனுக்கு மணவாட்டியாக ஏவாளை உண்டாக்கினார். ஆக எலும்பு என்பது மணவாட்டிக்கு அடையாளம்.





யோசேப்பு மரித்தபின் அவன் எலும்புகள் கானானுக்குள் சென்றது போல நமது **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குபின், அவருடைய மணவாட்டியாகிய நாமெல்லாரும் பரம கானானாகிய பரலோகத்தை அடைகிற பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். அல்லேலூயா!**

ஆதாமின் விலாவிலிருந்து அவரது மணவாட்டியாக ஏவாள் புறப்பட்டதுபோல, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவின் விலாவில் இருந்து மணவாட்டி சபையை தேவன் புறப்படப்பண்ணினார். இயேசுவின் மணவாட்டி சபையை தேவன் எப்படிப் புறப்படப்பண்ணினார் என்றால் விலாவில் குத்தப்பட்ட போது உண்டான இரத்தத்தோடும், தண்ணீரோடும் புறப்படப்பண்ணினார்.

இயேசுவிற்கு மணவாட்டியாய் மாறி பரலோகத்தை சுதந்தரிக்க வேண்டுமேயானால், இயேசுவின் சரீரத்திலிருந்து புறப்பட்ட தண்ணீரும், இரத்தமும் நம்முடைய சரீரத்தில் வந்தடைய வேண்டும். அதாவது இரத்தத்தின் அனுபவமும் தண்ணீரின் அனுபவமும் யாருடைய வாழ்க்கையில் இருக்கிறதோ அவர்கள் இயேசுவிற்கு மணவாட்டியாகும் சிலாக்கியத்தை நோக்கி சரியாய் பயணப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்க்கையை சற்றே கவனித்துப் பாருங்கள். அவர்கள் எகிப்திலிருந்து விடுதலைப் பெற்று கானானை நோக்கி சென்ற சம்பவம் நாம் பாவ உலகத்திலிருந்து விடுதலை அடைந்து, பரலோகத்தை அடையும் விசுவாச பாதைக்கு அடையாளமாயிருக்கிறது. இதில் அவர்கள் புறப்படும் போது கண்டது என்ன தெரியுமா? **இரத்தம்.**

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தங்கள் வாசல் நிலைக்கால்களில் பூசினார்கள். சங்காரத் தூதனின் நிழல் கடந்து போனபோது எந்த வாசல்களில் இரத்தம் பூசப்படவில்லையோ அந்த வீடுகளில் எல்லாம் அழுகையும், மரணமும் ஏற்பட்டது. ஆனால் **இஸ்ரவேலரோ** தங்கள் வாசல்களில் இரத்தத்தை பூசியிருந்தபடியினால் **இரத்தத்தினால் உண்டான பாதுகாப்பை கண்டார்கள்.**

அவர்கள் புறப்படும் போதே இரத்தத்தின் பாதுகாப்பை உணர்ந்தவர்களாய் புறப்பட்டார்கள்.

அதற்கு பின்பு அவர்கள் கண்டது செங்கடல், (தண்ணீர்) செங்கடலை பிளந்து கர்த்தர் அவர்களை அதினூடே நடந்து போக செய்தார். அந்த செங்கடலில் அவர்களை பின் தொடர்ந்து வந்த பார்வோனின் சேனையை முழுவதுமாய் மடங்கடித்து, இவர்களையோ கர்த்தர் கரைச் சேரப்பண்ணி தங்கள் பாதையை தொடரச் செய்தார்.





இந்த தண்ணீரின் அனுபவம் ஞானஸ்நானத்திற்கு அடையாளமாக இருக்கிறது. (1 கொரி 10:2) பார்வோனின் சேனையை மடங்கடித்தது போல நம்முடைய பாவத்திற்கு மரித்து, நீதிக்கு பிழைக்கும்படிக்கு ஞானஸ்நானம் மூலம் புதிதான ஜீவியம் உடையவர்களாய் தேவன் நம்மை மாற்றுகிறார் (ரோமர் 6:24). இரத்தத்தையும், தண்ணீரையும் கண்டவர்கள் பரம கானானின் பாதையில் சீராய் பயணப்படுகிறார்கள் என்பது உறுதியாகிறதல்லவா.

சரி இன்னும் சொல்கிறேன் கவனியுங்கள். இயேசுவின் முதலாம் அற்புதம் என்னவென்று கேட்டால் நாம் உடனடியாக சொல்லிவிடுவோம், கானா ஊரின் கல்யாண வீட்டில் நடந்த தண்ணீர் திராட்ச ரசமாய் மாற்றப்பட்ட அற்புதமே முதலாவது அற்புதம்.

நான் நம்புகிறேன். இயேசு எதைச் செய்தாலும் ஆண்டவர் வேதத்தில் எதைப் பதிவு செய்தாலும் அதற்கு காரணம் இல்லாமல் இருக்காது. அது மாத்திரமல்ல. வசனத்தில் ஒன்றும் ஜோடி இல்லாமல் இராது என்பதை நாம் மனதிலே வைக்க வேண்டும்.

இப்போது நான் சொல்வதை கூர்ந்து கவனியுங்கள். இதை விளங்கிக் கொள்ளும் கிருபையை நமக்குள் கர்த்தர் பெருகச் செய்வாராக. இயேசுவின் முதலாம் அற்புதத்தில், தண்ணீரை திராட்சரசமாக்கினார். சிலுவைக்கு போவதற்கு

முன்போ, பஸ்காவை ஆசரிக்கும் தருணத்தில் இயேசுவின் கரத்தில் திராட்ரசம் இருந்தது. இயேசு சொன்ன வார்த்தை **"இது என் இரத்தம்."**

முதல் அற்புதத்தில் தண்ணீரை திராட்ச ரசமாக்கினார். சிலுவைக்கு போவதற்கு முன்பு, திராட்ச ரசத்தை இரத்தமாக்கினார். சிலுவையில் தொங்கும்போதோ தண்ணீரையும், இரத்தத்தையும் அவர்களுக்கு காட்டினார்.

இதில் அர்த்தம் என்ன? என் பிள்ளைகளே நீங்கள் எப்போதும் என்னுடன் இருக்கும்படிக்கு தண்ணீரையும், இரத்தத்தையும் மறந்துவிடாதிருங்கள். வேதம் சொல்லுகிறது, இயேசு மணவாட்டி சபையை தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாதித்து (அப் 20:28). திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திக்கரித்தார் (எபே 5:26).

நான் பறப்பேன் என்றும், பரலோகத்தில் இருப்பேன் என்றும் சொல்லிக் கொண்டு தனிப்பட்ட விதத்தில் இயேசுவின் இரத்தத்தோடு நமக்கு தொடர்பு இல்லையென்றால், அடிப்படையிலேயே நாம் இயேசுவின் மணவாட்டியாவதற்கு தகுதி இல்லாது இருக்கிறோம்.

இந்த இரத்தத்தின் அனுபவம் பாவ மன்னிப்பில் தொடங்கி (1 யோ 1:7) சாத்தானை ஜெயிப்பது வரைக்கும் நமக்கு தேவை (வெளி 12:11).





இங்கே ஞானஸ்நானத்தைக் குறித்து சில வார்த்தையை சொல்லும்படி விரும்புகிறேன். ஞானஸ்நானம் என்பது சத்தியத்தை அறிந்தவர்களாய் தேவனோடு இணைக்கப்படும் படிக்கு மூழ்கி ஸ்நானம் பெறுதல் (ரோமர் 6:5). சுத்திகரிக்கப்படுதல் (எபே 5:26). உடன்படிக்கை செய்தல் (1 பேதுரு 3:21) சிலர், ஞானஸ்நானம் என்றால் இயேசுவின் நாமத்தில் மட்டும் தான் எடுக்க வேண்டும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் எடுத்தால் செல்லுபடியாகாது என்றெல்லாம் பிதற்றிக் கொண்டு திரிகிறார்கள்.

பிரியமானவர்களே! ஞானஸ்நானம் எதற்கு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். முதலில் தெளிவாய் இருங்கள். இயேசுவிற்கு மணவாட்டி ஆகும் தகுதிகளில் ஒன்று ஞானஸ்நானம்.

**ஆக மணவாட்டியாய் இருக்க விரும்புகிறவர்கள் மணவாளன் விரும்புகிறதை தான் செய்ய வேண்டும். அதற்கு மாறாக மற்றவர் விருப்பத்தையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.**

மணவாளனாகிய கிறிஸ்து தன் மணவாட்டி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்றால் (மத் 28:19) . . . . "நீங்கள் பிதா, குமாரன், பரிசுத்த

ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள்.” (எடுங்கள்). ஆகவே, இந்த சத்தியத்தின்படி ஸ்நானம் பெறுவதே வேத ஒழுங்கு.

இப்படி நாம் சத்தியத்திற்கு கீழ்படியும்போது, அச்சாரமும் முத்திரையுமாய் (எபே 4:30) தமது ஆவியானவரை நமக்கு அருளி அவரைக் கொண்டு நம்மை நித்திய மகிமைக்குள் சேர்த்துக் கொள்ள நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். அல்லேலூயா!

“விலையேறப்பெற்ற திரு இரத்தமே
அவர் விலாவில் நின்று பாயுதே,
விலையேறப் பெற்றோனாய் உன்னை
மாற்ற விலையாக ஈந்தனரே!”

✦ ✦ ✦ ✦ ✦ ✦



# 6
# மேவிபோசேத்தும் சீயோனும்

**தாவீது ராஜா எருசலேமை பிடித்தார்.** அதன் பின்பு அதற்கு சீயோன் என்றும் தாவீதின் நகரம் என்றும் பேர் உண்டாயிற்று. தாவீது எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்பட்டார். சகல நிறைவோடும் அவர் இருக்கும்போது தாவீது ஒரு கேள்வி கேட்டார்.

என்ன கேள்வி தெரியுமா? 2 சாமு 9:1 யோனத்தான் நிமித்தம் தயவு பெறத்தக்கவன் சவுலின் வீட்டாரில் உண்டா, அதற்கு அவருக்கு கிடைத்த பதில், யோனத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான். அவன் பெயர் மேவிபோசேத்.

மேவிபோசேத்தைக் குறித்து அறிமுக வார்த்தையை சொல்லும்போதே, இரண்டு கால்களும் முடமானவன் என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஒரு

காரணம் உண்டு என்று நம்புகிறேன். தாவீது எருசலேமை பிடிக்க போன போது, எபூசியர் சொன்ன வார்த்தை என்னவென்றால் சப்பாணியும், குருடரும் உம்மைப் தடுப்பார்கள். அதின் நிமித்தம் தாவீதின் ஆத்துமா குருடரையும், சப்பாணியையும் பகைத்தது. (2 சாமு 5:8).

குருடரும், சப்பாணியும் வீட்டில் சேரலாகாது என்ற வார்த்தை தாவீதின் நாட்களில் சொல்லப்பட்டது. தாவீதின் கேள்விக்கு சொல்லப்பட்ட பதிலின் அர்த்தம் இப்போது உங்களுக்கு விளங்கவில்லையா? அந்த வார்த்தைகளை சற்றே விவரித்து காண்பிக்கிறேன்.

ராஜாவே, உம்முடைய ஆத்துமா பகைக்கிற நிலையில் ஒருவன் இருக்கிறான். அவன் உம் கிட்டே சேர முடியாது. ஆகவே, அவன் உமக்கு தூரமாயிருக்கிறான். தாவீதின் செயலைப் பாருங்கள். அவனை என் கிட்டே கொண்டு வாருங்கள் என்று ஆள் அனுப்பி அழைப்பித்தான். மேவிபோசேத்து வந்து ராஜாவை பணிந்த போதோ ராஜா அவனைப் பார்த்து, நீ இங்கேயே இருந்து விடு இங்கிருந்து நீ போக வேண்டாம். என்னுடைய சமூகத்தில் நித்தம் அப்பம் புசிப்பாய் என்றான்.

தாவீதோடு இருந்தவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். ஆத்துமா பகைக்க வேண்டிய ஒருவன், தூரமாய்





இருக்கவேண்டிய ஒருவன் கிட்டே அழைத்துக் கொண்டு வரப்படுவது மாத்திரமல்ல, அவரோடே அப்பம் புசிக்கவும் அமர்த்தப்படுகிறான். என்ன காரணம் தெரியுமா?

## 1.இரத்தம்

இரத்தம். என் ஆத்துமா பகைக்கிற நிலையில் நீ இருக்கலாம். ஆனால் உனக்குள் ஓடுகிற இரத்தம், எனக்கு பிரியமானவனுடைய (யோனத்தானின்) இரத்தம். ஆகவே உன்னை என்னால் வெறுக்கவே முடியாது.

அருமையானவர்களே! இதைத்தான் நம் யெகோவா (பிதா) நமக்கு செய்கிறார். நாம் அவருக்கு தூரமானவர்கள். அவர் நம்மை பகைக்ககூடிய நிலையில் வாழ்ந்தவர்கள். அவர் பட்சிக்கும் அக்கினி, அவர் நினைத்தால் ஒரு நிமிஷத்தில் நம்மை அழித்துவிடமுடியும்.

ஆனால் அவர் அப்படி செய்கிறதுமில்லை, இனி செய்யப்போவதும் இல்லை. காரணம் நமக்குள் ஓடுகிற இரத்தம், **நமக்காய் கல்வாரியில் சிந்தப்பட்ட இரத்தம், நம்மை கழுவி சுத்திகரித்த இரத்தம் அவருக்கு பிரியமானவருடைய இரத்தம் அல்லவா.** பின்னே நம்மை எப்படி அவர் தள்ள முடியும்!

அந்த இரத்தத்தின் நிமித்தம் தூரமாய் இருக்கவேண்டிய நாம் இப்போது அவருக்கு சமீபமாய் இருக்கிறோம். அவருடைய ஆசீர்வாதத்தில் பங்குள்ளவர்களாய் இருக்கிறோம். இன்னும் கொஞ்சம் நாளில் அவருடைய ஸ்தலமாகிய பரலோகத்தில் நுழைந்து அங்கேயும் அகமகிழ்கிறவர்களாய் இருப்போம்.

ஒரு வேளை நம்முடைய தோற்றத்தைப் பார்த்து நம்மை சிலர் கணிக்கலாம், எடை போடலாம், நம்முடைய பெலவீனங்களைப் பார்த்து, நாம் இயலாதவர்கள் என்றும், சிகரத்தை ஒருநாளும் வாழ்க்கையில் அடையமுடியாதவர்கள் என்றும் மற்றவர்கள் சொல்லலாம். இவனெல்லாம் இங்கே வந்து என்ன செய்யப்போகிறான். இரும்பு அடிக்கும் இடத்தில் ஈ-க்கு என்ன வேலை, இவனெல்லாம் ஊழியத்திற்கு வந்து என்னத்தை சாதிக்கப் போகிறான்? என்றெல்லாம் கூட நம்மைப் பற்றி மறைமுகமாகவோ, ஏன் நேராகவோ கூட சிலர் சொல்லலாம்.

எனக்கு அருமையானவர்களே! ஒன்றை உங்கள் உடன் சகோதரனாய் இங்கு சொல்கிறேன். உலகத்திலும் சரி, ஊழியத்திலும் சரி, உன்னதத்திலும் சரி நமக்கு தயவை உண்டாக்கவும், நம்மை தகுதிப்படுத்தவும் எல்லா இடங்களிலும் நம்மை வெற்றி சிறக்கப் பண்ணி நம்முடைய முகத்தை பிரகாசிக்க





செய்ய இயேசுவின் இரத்தம் வல்லமை உடையதாய் இருக்கிறது. சோர்ந்து போகாதிருங்கள். நன்றியறிதலோடு கர்த்தரைத் துதித்து முன்னேறிச் செல்லுங்கள்.

அவரின் இரத்தத்தினிடத்திற்கு நம்மை சேரப்பண்ணினவர், இந்த பூமியிலும், உன்னதத்திலும், உயர்ந்த இடத்தில் ஏறும்படிச் செய்ய போதுமானவராய் இருக்கிறார்.

## 2.இருதயம்

தாவீது மேவிபோசேத்தை ஏற்றுக் கொண்டதற்கு காரணம். அவனுக்குள் ஓடும் இரத்தம் மாத்திரமல்ல மேவிபோசேத்தின் இருதயமும் முக்கிய பங்கு வகிக்கிறது. எருசலேமிலிருந்து முடவர்களை, தாவீதின் ஆத்துமா பகைக்க காரணம் அவர்களின் இருதயம்.

தாவீது பிடிக்க நினைத்ததை அவர்கள் தடுக்க நினைத்தார்கள். மேவிபோசேத்தின் இருதயமோ தாவீதின் இருதயத்தோடு ஒன்றித்திருந்தது. சொல்லப்போனால் யோனத்தானின் இருதயத்தைப் போலவே இருந்தது.

- ✔ மேவிபோசேத் தாவீதைக் கனப்படுத்தினான் (2 சாமு 9:6 - அடியேன்)

✔ பணிந்து கொண்டான் (2 சாமு 9:6)

✔ தன்னைத் தாழ்த்தினான் (2 சாமு 9:8)

✔ தாவீது தனக்கு செய்ய நினைப்பதை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டான் (2 சாமு 9:13)

இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இயேசுவின் இரத்தம், இயேசுவின் இரத்தம் என்று சொல்லிக் கொண்டு நம்முடைய இருதயம் தேவனோடு செம்மையாய் இல்லையென்றால் தேவன் நம்மை தம்மோடு வைத்துக்கொள்ளவோ, நம்மை உயர்த்தவோ முடியாது என்பதை மனதில் வையுங்கள்.

மேவிபோசேத்திற்குள் யோனத்தானின் இரத்தம் ஓடினது மாத்திரமல்ல, யோனத்தானின் இருதயமும் இருந்தது. யோனத்தான் தாவீதை நேசித்தான், மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டான், தாவீதோடு ஒட்டிக்கொண்டான், தாவீதின் பட்சத்தில் இருந்தான். அதே இருதயம் மேவிபோசேத்திற்கும் இருந்தது.

அன்பானவர்களே! **இயேசுவின் இரத்தம் நம்மில் இருக்குமானால் அவருடைய இருதயமும் நம்மிலே இருக்கும்.** எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருந்தாலும்





உள்ளிந்திருந்தயங்களை ஆராய்ந்து அறிகிற தேவனுடைய கரத்தில் நம்மை ஒப்புக் கொடுப்போம்.

தேவனே தீமையை உண்டாக்குகிற வழிகள் என்னிடத்தில் உண்டோ என்று ஆராய்ந்து பாரும் என்று ஜெபிப்போம். நம்முடைய இருதயத்தை செம்மையானதாக மாற்றுவாராக. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாய் தேவனை தரிசிக்கும் கிருபையை அருள்வாராக. கிறிஸ்து இயேசுவின் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.

**தேவனோடு நம்முடைய இருதயம் ஒன்றித்து இருக்குமென்றால், அவருடைய ஆசீர்வாதத்தில் மேன்மையான சுதந்தரத்தை இம்மையிலும், மறுமையிலும் நமக்குத் தர தேவன் வல்லவராய் இருக்கிறார்.**

இருதயம் ஒன்றாய் இருப்பதைக்குறித்து வேதத்தில் சில சம்பவங்களை உங்களது கண்களுக்குமுன் கொண்டுவருகிறேன்.

### (i) கைக்கொடுப்பார்

யெகூ யோனதாபை சந்திக்கிறான் (2 இராஜா 10:15). அப்போது யெகூ யோனதாபை உபசரித்து அவனைப் பார்த்து கேட்கிறான், உன் இருதயம் என் இருதயத்தோடு செம்மையாய் இருக்கிறதா? அதற்கு

யோனதாப் ஆம்! அப்படியே இருக்கிறது என்றான். அப்போது யெகூ, அவன் கையைப் பிடித்து அவனைத் தன் இரதத்தில் ஏற்றிக் கொண்டான்.

கர்த்தருடைய பிள்ளைகளே! உங்கள் இருதயம் தேவனுடைய இருதயத்தோடு ஒன்றித்திருக்கு-மேயானால் உங்களுக்கு கைக் கொடுத்து தம்முடைய ஆசீர்வாத இரதத்தில், ஊழியத்தில் உங்களை ஏற்றிக் கொள்ளவும், தம்முடைய சகல நன்மைகளிலும் உங்களை பங்குள்ளவர்களாக்குவதற்கும் தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

எனக்கு கைக்கொடுத்து தூக்கிவிட ஆளில்லையே என்றும், அண்ணன் இல்லையே என்றும், அப்பா இல்லையே என்றும் நீங்கள் ஒருநாளும் அழவேண்டிய அவசியமில்லை. அவர்கள் இருந்து செய்யவேண்டியதைப் பார்க்கிலும் அதிகமாய் உங்களுக்கு செய்ய ஆண்டவர் இருக்கிறார் என்பதை உறுதியாய் சொல்லுகிறேன்.

எபிரேயர் 2:16ஐ வாசித்துப் பாருங்கள்! அவர் தேவ தூதருக்கு உதவியாய் கைக்கொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு (நமக்கு) உதவியாக கைக் கொடுத்தார். பார்த்தீர்களா! எத்தனை அற்புதமான வார்த்தை!! நீங்கள் எந்த சூழலில் இருந்தாலும் இதை வாசிக்கும் போது உங்கள் ஆவி உயிர்பிக்கப்படுவதாக.





சகோதரர் பலர் இருந்தும் ஒருவரும் என்னை கைப்பிடித்து தூக்கிவிடவில்லையே என்ற யோசேப்பின் நிலையிலே நீங்கள் இப்போது இருக்கலாம். உங்களுக்கும் எனக்கும் தம்முடைய கரத்தைக் கொடுத்து, அதினாலே நம்முடைய கரத்தைப்பிடித்து தூக்கிவிட தேவன் இருக்கிறார் என்பதை ஒருநாளும் மறந்துவிடாதீர்கள்.

உங்களுக்குள் தமது தரிசனத்தைக் கொடுத்தவர் அதை நிறைவேற்றும்படிக்கு உங்கள் கரத்தைப் பிடித்து உங்களை நடத்திக் கொண்டு போகவும் முடிவிலே உங்களை வெற்றிச் சிறக்கப் பண்ணவும் உண்மையுள்ளவராய் இருக்கிறார். இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏசாயா 45:1ம் வசனத்தைப் பாருங்கள். தேவன் கோரேசின் வலதுகையைப் பிடித்தார். பிடித்தவர் சொன்னது என்னத் தெரியுமா? நான் உனக்கு முன்னே போவேன் . . . . வெண்கல கதவுகளை உடைப்பேன். இருப்பு தாழ்பாள்களை முறிப்பேன், பொக்கிஷங்களையும், புதையல்களையும் தருவேன்.

உங்கள் கரத்தைப் பிடிக்கிறவர், இதையே உங்களுக்கும் செய்வார். உங்களுக்கு முன்னால் இருக்கும் வெண்கல கதவுகள் உடைக்கப்படுவதாக. தேவன் ஏற்படுத்தினதை சுதந்தரிக்கும்படிக்கு கர்த்தர் உங்களை நடத்திக் கொண்டுபோவாராக. **ஒன்றே ஒன்றுதான் இருதயம் தேவனோடு ஒன்றித்திருக்கட்டும்.**

## (ii) முந்தி ஓடப் பெலன் தருவார்

எலியாவின் வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள், கர்மேல் பர்வதத்தில் தேவ அக்கினி இறங்கின சமயம் ஆகாபும் அங்கே இருக்கிறார், எலியாவும் இருக்கிறார், ஆகாப் உலக மனுஷனுக்கு அடையாளம், எலியா தேவ மனுஷனுக்கு அடையாளம். மழை இன்னும் கொஞ்ச நேரத்தில் தேசத்தில் வரப்போகிறது. ஆகாப் தன் இரதத்தில் ஏறிப் போனான். எலியாவோ ஆகாபின் இரதத்தில் போகவில்லை. காரணம் எலியாவின் இருதயம் ஆகாபின் இருதயத்தோடு ஒன்றித்து போகவில்லை. எலியாவின் இருதயம் தேவனோடு ஒன்றித்திருந்தது.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே! உங்கள் இருதயம் தேவனோடே இருக்குமானால் சில நேரங்களில் உலக வழக்கந்தாங்க என்று சொல்கிற சிலவற்றிற்கு ஒத்துப்போக முடியாது. சில சமயங்களில் ஒரு சில உயர்வுகளை மனம் ஏற்றுக்கொள்ளாது.

இன்னும் சொல்லப்போனால், நாம் இரதங்களை இழக்கும் தருணம் கூட வரும். எந்த சூழ்நிலையிலும் தேவனோடு இருப்பதில் உறுதியாய் இருப்போமென்றால் ஆகாபின் இரதத்திற்கு முந்தி போகும்படிக்கு எலியாவிற்கு விசேஷித்த பெலன் கொடுத்த தேவனாகிய கர்த்தர் உங்களுக்கும் அதையே செய்ய வல்லவராய் இருக்கிறார்.





ஊழியத்தில், வேலையில் நேர்மையற்ற வழியாய் வரும் நன்மைகளை நாம் ஏற்றுக்கொள்ள மறுப்போமானால், அவைகள் நமக்கு கிடைப்பதினால் உண்டாகிய ஆசீர்வாதங்களை விட, மேலான ஆசீர்வாதங்களை உங்கள் வாழ்க்கையில் அருள ஆண்டவர் வல்லவராய் இருக்கிறார்.

முந்திப் போகும் பெலன் என்று சொல்லும்போது ஒரு வார்த்தை என் மனதில் தொனிக்கிறது. சீஷர்களுக்கு இயேசு சொன்னதை இங்கே நினைவு கூறுகிறேன். நீங்கள் பெலனடைந்து . . . . உலகத்தின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.

முந்திப் போகும் பெலனை மாத்திரமல்ல உலகத்தின் அத்தனை முனைகளிலும் உங்களை சாட்சியாய் நிறுத்தும்படி தேவ பெலன் நம்மில் கிரியை செய்வதாக.

## (iii) உயர்த்துவார் (அக்கினி இரதம்)

எலியாவின் வாழ்க்கையைக் குறித்து இன்னும் சொல்வோமானால், எலியாவிற்கு தேவன் பெலத்தை கொடுத்தது மாத்திரமல்ல, ஏற்ற நேரம் வந்தபோது தேவன் வானத்திலிருந்து அக்கினி இரதத்தையே அனுப்பி எலியாவை உன்னதத்திற்கு உயர்த்த வல்லமையுள்ளவராய் இருந்தார்.

சில இரதங்களை இழந்த தருணத்தில் இப்போது நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கலாம். இதை உங்களுக்காக பிரத்தியட்சமாய் எழுதுகிறேன். இழந்துவிட்டேனோ என்ற மனமடிவு அடையத் தேவையில்லை. வேண்டுமானால் இந்த எழுத்துக்களை அடிகோடிட்டுக் கொள்ளவும். "காத்திருங்கள்". உங்கள் வாழ்க்கைக்கும் ஏற்ற நேரம் வைக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் ஒருபோதும் எட்டி பிடிக்க முடியாத உயரத்திற்கு கொண்டுபோக தேவன் வல்லவராய் இருக்கிறார்.

இந்த வார்த்தைகளை இங்கே விசுவாசத்தோடும், ஜெபத்தோடும் எழுதுகிறேன். உங்களில் சிலரின் உயர்வுக்காக தேவன் வைத்திருக்கும் நாட்கள் துாரத்தில் இல்லை. சமீபித்திருக்கிறது. கர்த்தாவே இந்த நாட்களை உம்முடைய பிள்ளைகளுக்கு தருவீராக.

## (iv) மேன்மையாக வைப்பார்

எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது எலிசா சொன்ன வார்த்தையை கவனியுங்கள். என் தகப்பனே! . . . இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே (1 இராஜா 2:12) இந்த வார்த்தையை வாசிக்கும் போதே. வோறொரு வசனம் ஞாபகத்தில் வரவில்லையா!





"சிலர் இரதங்களைக் குறித்தும் குதிரைகளைக் குறித்தும் மேன்மைப் பாராட்டுவார்கள்." சங் : 20:7

பொதுவாக ஜனங்களுடைய மேன்மை எதிலிருக்கிறது. இரதங்களிலும், குதிரைகளிலும் இருக்கிறது. இப்போது கவனியுங்கள், எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது எலிசா சொன்ன வார்த்தை . . . "இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே" ஆண்டவர் எலியாவிற்கு அக்கினி இரதத்தை அனுப்பினது மாத்திரமல்ல, எலியாவின் வாழ்க்கையையே இஸ்ரவேலருக்கு இரதமாக (மேன்மையாக) மாற்றிவிட்டார்.

கர்த்தருடைய பிள்ளையே! இதே தான் உங்கள் வாழ்க்கைக்கும், தேவன் உங்களை உயர்த்துவது மாத்திரமல்ல, உங்கள் வாழ்க்கையையே ஜனங்களுக்கு மேன்மையாக வைப்பார். உங்களைக் குறித்து எண்ணும்போதே, உங்களை சுற்றியுள்ளவர்கள் மேன்மையாய் எண்ணவும், மேன்மையாய் சொல்லவும் கர்த்தர் செய்வார்.

1. கைக்கொடுப்பார்
2. முந்தி ஓடப் பெலன் தருவார்
3. உயர்த்துவார் (அக்கினி இரதம்)
4. நித்திய மேன்மையை தருவார்

மேவிபோசேத் ராஜாவின் இருதயத்தோடு ஒன்றித்திருந்ததினால் அரண்மனையின் ஆசீர்வாதங்கள் அவன் வாழ்க்கையை அலங்கரித்தது.

ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம் பண்ணும் பாக்கியம் அவனுக்கு கிட்டிற்று. அவன் தகப்பன் வீட்டின் நிலங்கள் திரும்ப கிடைத்தது. அவனுக்காக வேலை செய்ய ஆட்கள் கிடைத்தார்கள். அவனோ அரண்மனை ஆசீர்வாதங்களில் களிகூர்ந்து கொண்டிருக்கிறான்.

கர்த்தருடைய பிள்ளையே! இதை எழுதிக் கொண்டிருக்கும் போதே, மேவிபோசேத்தின் வாழ்க்கையில் இருக்கும் எண்ணற்ற சத்தியங்கள் என் கண்களுக்கு முன்பாக மின்னிக் கொண்டிருக்கிறது. அவைகளை வேறொரு புத்தகத்தில் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இப்போதைக்கு இங்கே நிறுத்துகிறேன்.

இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் இயேசு எப்படி பிதாவோடு ஒன்றித்திருந்தாரோ, அப்படியே தேவனுடைய இருதயத்தோடு ஒன்றித்து வாழ அர்ப்பணிப்போம். விவரிக்க முடியாத விசாலமான ஆசீர்வாதங்கள் உங்களையும் உங்கள் வீட்டையும் நிரப்பட்டும். நீங்கள் வாழ மாட்டீர்கள் என்று சொன்னவர்கள் முன்பு சௌக்கியமாய் நீங்கள் வாழ்வீர்கள், தழைப்பீர்கள், செழிப்பீர்கள்.

எதிர்காலம் உங்களுக்கு இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களின் மத்தியில் தேவன்





உங்களை வைரக்கல்லைப் போல பிரகாசிக்க செய்வார். நினையாத நித்திய ஆசீர்வாதங்கள் உங்கள் சிரசின் மீது வந்து இறங்குவதாக. மகிமையின் தேவன், நீங்கள் மகிழ்ந்து அவரில் களிக்கூறும்படி செய்வார். ஆமென்!

"உம்மோடு இருக்கனுமே - ஐயா

உம்மைப்போல் வாழனுமே"

## Books & Bibles referred

1. Dake's annotated referrence Bible
2. Spirit filled study Bible
3. Mac arthur Bible hand book and study Bible
4. The Preacher's outlines and sermon Bible
5. Viviliam
6. Ryrie study Bible



## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**